அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7 இதழ் 9 விலை அ. 4	மன்மத ௵ மார்கழி மீ" டிசம்பர்-1955-ஜனவரி-'56	வருட சந்தா ரூ. 2-4-0



தாதை தாளொடு பிறவித் தாளெறிந்து
நிருத்தர் இரு தாளைச் சேர்ந்த மைந்தர் சண்டிகேஸ்வரர்
(பெரியபுராணச் சித்திர விளக்கம் 21. பக்கம் 427)

பொருளடக்கம்

		பக்கம்
1. உள்ளும் வெளியும்	(திருப்புகழ் மணி)	... 385
2. ஆலய வழிபாடு	(தென்னுப்பிரிகா-டர்பன்-திரு. ச. மு. பிள்ளை)	... 387
3. அடியார்க்கு அடியார்	(எஸ். வி. ரமணி)	... 391
4. கந்தர் அநுபூதி	(கி. வா. ஜகந்நாதன்)	... 395
5. புல்வாயும் புலியும்	(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)	... 400
6. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்	(சே. த. ராமலிங்கம் பிள்ளை, பி.ஏ., பி.டி.)	... 402
7. விக்னேஸ்வரம் பிரம்மஸ்வரூபம்	(ஆ. கி. ரங்கராஜன்)	... 406
8. சீமந்தனி	(ரசபதி)	... 411
9. மங்களா சாஸனம்	(அன்பன்)	... 422
10. சண்டேசுர நாயனுர்	(கி. வா. ஜ.)	... 427
11. LIFE - A TRUST	*(Thiruppugal Mani)*	... 430

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட, ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினுல், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ஞு மார்கழி மீ டிசம்பர்-1955—ஜனவரி-1956	இதழ் 9

உள்ளும் வெளியும்

(திருப்புகழ் மணி)

வாழ்வு இரண்டு விதம். அக வாழ்வு ஒன்று, புற வாழ்வு மற்றொன்று. உள்ளும் வெளியுமாய்ப் பரந்து நிற்கின்றது மானிட வாழ்வு. புற வாழ்வு ஜடத்தின் வாழ்வு. கண்ணையும் கருத்தையும் பேத உலகத்தில் செலுத்தி ஈசனை மறந்து, நிலையற்ற பொருள்களிடத்தில் வேட்கையைச் செலுத்தி நடத்தும் வாழ்வு—புற வாழ்வு. அது அசுரர் வாழ்வு. அன்பும் கருணையுமாய் தியாகத்தினால் சேவை செய்து ஈசனை நினைந்து ஜீவ ராசிகளை யெல்லாம் இறைவன் கோயிலாகக் கருதி ஆனந்தமுற்று நடத்துவதே அக வாழ்வு. மனத்தகத்து நிற்கும் பரமனைத் தியானித்து நிற்கும் பெரியார்கள் அக வாழ்விலேயே நிற்பர். புற வாழ்வு துன்பத்தை விளைக்கும். அக வாழ்வின் திணிபு ஏற ஏற, புற வாழ்வு நழுவிவிடும். உள்ளும் வெளியும் ஒன்றாகக்

எந்நாளும் காண எழில்ஞான சக்திபெற
மன்னு தருகவரம் மயிலேறும் பெருமானே !

கருதும் ஞானிகள் பெருவாழ்விலேயே நிற்பர். உள்ளும் வெளியும் கூடாவிடில் உயிரில்லை. இரண்டும் கூடி இன்பமுறும் நிலையை வகுக்கின்றூர்கள் சித்தர்கள்.

"விண்கலந்து நின்றஜோதி மேலைவாசலைத் திறந்து
கண்களித்த உள்ளுளே கலந்துபுக்கு இருந்தபின்
மண்பிறந்த மாயமும் மயக்கமும் மறந்துபோய்
எண்கலந்த ஈசனோடு இசைந்து வாழ்வது உண்மையே."

மண்ணிலும் விண்ணிலும், அகத்திலும் புறத்திலும் ஒருமையாய் நின்று அருள்புரியும் ஜோதியை ஒருமையுடன் வழிபடுவதே ஆனந்தம். தெய்வத்தின் விமர்சனம் உலகம் என்று கருதி, உலகத்தோடு ஒத்து வாழ்வதே மானிடன் கடமையாகும். எங்கும் ஈசன் என்று உறுதியான உணர்ச்சி கொண்டு ஈடுபடுவதே ஒருமையாகும். இது ஞானிகள் வாழ்வு. பன்மையுலகத்தை ஒருமையில் கூட்டுவது பெருமக்கள் செய்யும் தவம். உள்ளத்தில் உறையும் அன்பெனும் சக்தியில், அதாவது ஏக முகத்தில் ஒடுங்குவது வெளியில் காணப்பட்ட பல்முகக் காட்சி. ஆதலால் தான் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று போதித்தார் வள்ளலார். எல்லாவற்றையும் ஒரு முகமாகப் பார்ப்பவர் தான் ஸம தரிசனத்தை அடைகின்றூர்கள். ஸம தரிசனத்தை அடைந்தாலன்றி உள்ளுற்றபடி வெளியைக் காணக் கிடைக்காது. தம்முயிர் போல் மற்ற உயிர்களை எண்ணித் திளைக்கும் ஞானிகள், எங்கும் ஈசனைக் காண்பதால், பேதம் எனும் பாப சிந்தனை தவிர்த்து, ஞான

சித்தர் குலமணியே சித்தம் கனிந்தெனக்குச்
சத்திமிக அருளியுனைச் சாரவைத்தால் ஆகாதோ.

நிர்த்தனம் செய்யும் நடராஜ ஸான்னியத்தை இதயத்தில் உணர்கின்றார்கள். உள்ளம் போல வெளியும் என்று, இரண்டையும் ஒருமையாக்கி அன்பில் வாழ்வதே பேரின்ப வாழ்வாகும்.

ஆலய வழிபாடு

(தென்னாப்பிரிகா-டர்பன்-திரு. ச. மு. பிள்ளை.)

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என ஔவைப் பிராட்டி அருளியது யாவரும் அறிந்த தொன்று. ஆன்மாவின் மாசு நீங்கி, இறைவன் திருவடி நிழலில் என்றும் இன்பம் துய்க்க வேண்டியதற்கான சாதனங்கள் பலவற்றுள்ளும், ஆலயவழிபாடு தலைமை சான்றது என்பதை யாவரும் ஒப்பாகிறார். எனினும் நாடோறும் கோவில் புக்கு சச்சிதானந்த சிவத்தைப் பணிந்து அருள்பெற விரும்புவோர் ஒருசிலரே யாவர். மற்றையோர் "கோவிலிற்றான் கடவுள் இருக்கின்றனரோ? கடவுள் எங்கும் நிறைபொருளாதலின் நாமிங்கிருந்தபடியே வணங்கிவிடலாம்" என்று கூறுவதோடமையாது, சிவவாக்கியர் முதலிய பெரியாரின் பாடல்களில் பலவற்றைக் காட்டித் தாம் திருவருளுக்குப் பாத்திரமாகாமற் போவதோடு, பிறரையும் தடுத்துப் பிறவிக் குழியில் வீழ்ந்து வருந்துகின்றனர். என்னே இவர்கள் பேதைக்கூற்று!

சிவவாக்கியர் தாம் எந்நிலையில் நின்று இவ்வருஞ் செய்யுள்களில் இவ்வரிய விஷயங்களைக் கூறினர்? அது யாருக்கு உரித்தானது? கணப்போதும் சிவசிந்தனை செய்ய விடாதவாறு ஆக்கிவிடும் குடும்ப சமுத்திரத்தில் கிடந்திளைப்பவர்கட்கா, அன்றி முற்றுந் துறந்து சிவானுபூதி ஒன்றையே இலட்சியமாய்க் கொண்டதால், தற்போ

தீக்குணங்கள் தீண்டாத் திடசித்தம் வேண்டுமெனும் ஊக்கம் அதனை உவந்தருளல் ஆகாதோ.

தம் நீங்கிச் சிவமாம் தன்மை எய்திய சிலர்கட்கா? என்று உன்னுவோர்க்கு இஃது தெற்றென விளங்கும்.

"ஆலயந்தொழு அறந்தனை நிறப்ப நல்லருச்சனை
புரிகென்றே
ஓலமிட்டு நான்மறையெலா முரைப்பது
உலகரைக் குறித்தன்றே
மூலகாரண பரம்பர சூக்கமாய் முழுதையும்
காணென்னுச்
சிலமுற்றிய அறிஞரைக் குறித்துரை செய்தது
அம்மறையன்றே"

என்னும் பாவையும் நன்றாய் உன்னுக!

சின்னஞ்சிறு குழந்தைகளை நாம் பாடசாலைக்கு அனுப்பி வைத்தால், அங்கு ஆசிரியர் பல திறப்பட்ட உருவங்களைக் காண்பித்தும், அக்குழந்தைகளின் மனப் பான்மைக்கேற்பக் கதைவாயிலாக, நாடகமாக நடித்துக் காட்டியும், பெரிய பெரிய எழுத்துக்களால் சிறு சிறு வார்த் தைகளை எழுதிக் காட்டியும், பலநாட்கள் வரையில் எழுதி வாசிக்கச் செய்தும் வருவது, அக்குழந்தை களின் அறிவு அத்துணை பக்குவமுறாது இருத்தலின் காரணத்தா லன்றோ? பின்னர் அக்குழந்தைகள் இவ்வித உபகாரங்களின்றித் தாமே எழுதவும், படிக்கவும் கற்று விடுகின்றனர். மிகக் கற்றுத் தேர்ந்த ஒருவனுக்கு இக் காட்சிகள் எவ்விதம் தோன்றும் என்பதை உன்னுவோ மாக. அதைப்போல் சரியையாதிகளைக் கடந்த சிவஞானி கட்கு நாம் செய்யும் கீழ்த்தரப்பட்ட வணக்கங்களும், செய்கைகளும் அலட்சியமாகவே தோன்றும்.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர்க் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்னும் தாயுமானுர் திருவாக்கும் நோக்குக.

நிலமகட்கு ஆடை போன்று திகழும் சமுத்திரத்தை, தான் பிறந்ததிலிருந்து கண்டிராத ஒருவன், அக்கடலைக்

பொன்னுலக் காவலனே பூதேவர் பாலகனே
என்னகத்தில் என்றும் இருந்தருளல் ஆகாதோ.

கண்டவனிடம் அன்னதின் தன்மையைக் கேட்டபோது, பின்னவன், கடல் இவ்வளவு பரப்புள்ளது என்றும், அதில் இன்னின்ன பொருட்கள், சத்துக்கள், மற்றைத் திரவியங்கள் உண்டென்றும், அதன் நீர் உவர்ப்புடைய தென்றும், அதில்பல ஆறுகள் வீழ்கின்றன வென்றும், இன்னும்பல வாறாகக் கடலைப்பற்றி எடுத்தோதினுலும், கேட்பவனுக்குச் செவியளவில் உறையுமேயன்றி, அதன் முழுவிபரமும் தானேநேரில் கண்டாற்றான் இவன்மனம் அமைதியடையும். கடவுளின் தடத்த இலக்கணங்களும் பிறவும், பாலில் நெய் போல் மறைந்திருப்பதால், ஆலயத்திலுள்ள உருவம் கடவுளின் தத்துவங்களைத் தயிரில் நெய்போல் விளக்கிக் காட்டுகின்றன. தூலமான ஒருபொருளை முன்னரே தெரிந்திருந்தால்தான், சூக்குமமாகப் பிறகு அதைப்பற்றி ஆய்ந்து தேர்ந்து தெளியக் கூடும்.

"ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி
காட்டுவார் போல்
தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை
காட்டுவார் போல்
தூலத்தை முன்பு காட்டிச் சூக்கும சொரூப
மான
மூலத்தைப் பின்பு காட்ட முனிவரர்
தொடங்கினரே"

ஆதலின் ஆலய வழிபாட்டின் உட்பொருளும் இதுவேயாம். கடவுள் ஒருவர் உண்டென்ற குறிப்பை ஆலயத்துள்ள உருவங்களில் பதித்து வணங்குவோர் ஒரு பகுதியினரும், அவ்வுருவமே கடவுளென்று உறுதியாக நினைத்து வணங்குவோர் மற்றொரு பகுதியினரும் உண்டு. பின்னையவரை விட முன்னையவரே தேர்ந்த அறிவாளிகள் என்பது சான்றோரின் கொள்கை.

கடைத்தெருவில், குழந்தைகள் விளையாடும் உருவங்களை வைத்து விற்கும் கடையிலுள்ள வாழைச் சீப்புகள்,

---

தன்னறிவு என்பால் தழைத்தோங்க ஆதரவு
அன்னையுமை பாலா அளிப்பதுவும் ஆகாதோ.

உண்மையான வாழைக் கனியையே குறிப்பிடுகின்றன. அதுபோலவே கோவில்களில் விளங்கும் உருவங்கள், உண்மையான கடவுள் தத்துவத்தை உணர்வதற்கு ஞாபக மூட்டுகிறதே யொழிய, வேறின்மை காண்க. ஒருவன் உருவச்சிலைகள் விற்கப்படும் கடையிலுள்ள ஒரு பழம் உண்ண எவ்வளவு பயன்படாதோ, அதுபோலவே ஒருவன் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களையே கடவுள் என்று வழி படுவதால் மட்டும் வீடுபேறடையக் கூடுமென நினைப்பது இயலாது. செடிமுதிர்ந்து மரமாவதற்குள் தீண்டாவண்ணம் வேலி கோலிவைத்தல் எவ்விதம் அவசியமோ, அவ்விதமே சிவத்தின் உண்மைத் தத்துவத்தை யுணர்ந்து கொண்டு, சிவஞான மடைவதற்கு ஆலயமும், மற்ற அனுட்டான முறைகளும் வேலிபோன்றவைகளாம். மரம் முதிர்ந்து விட்டால் வேலிஅதற்கு அவசியமன்று.

அவ்வண்ணமே கடவுளின் வியாபக அறிவு அடைந்தவொரு சிவஞானிக்கு ஆலயவழிபாடும், மற்றவைகளும் முக்கியமாக வேண்டப்படுவன ஆகாவாம். ஆகையால் நமது முன்னோர்கள் இவ்வரிய கருத்துக்கொண்டே ஆலயங்களை நிறுவி யிருக்கின்றனர். ஆதலால் சிவஞானமடையப் பக்குவமுறும் நிலையி லிருப்பவர்கட்குக் கோவில் வழிபாடு மிக வேண்டப் படுவதேயாம்.

இதனைச் சிவஞான போதம் 12-ம் சூத்திரத்தில்,

"செம்மலர் நோன்றாள் சேரவொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனப் படுமே"

எனத்திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்.

இதுபற்றியே ஒருவன் காலையில் ஆலயம் சென்று வழிபடின் அன்று செய்த பாவமும், மாலைக் காலத்தில் வழிபடின் பிறவிகடோறும் செய்த கொடும் பாவமும் திருமெனச் சாற்றுவதன் காரணங்களை உய்த்துணர்வோமாக.

சித்தாநு பூதியைச் சீக்கிரம் யான்பெறவே
சித்தம் இரங்கியருள் செய்வதுவும் ஆகாதோ.

அடியார்க்கு அடியார்

(எஸ். வி. ரமணி)

அழகிய சிற்றூர் அது. ஊரின் மேற்குப் பாகத்தில் ஓர் அழகிய கோயில். எதிரில் சிறுதாமரைத் தடாகம். நடுவில் ஓர் நீராழி மண்டபம். குளத்தைச் சுற்றிலும் சிறிய மதில். வெகுகாலத்திற்கு முன்பு கட்டிய கோயில் தான். இருந்தாலும் புதுமை குன்றாமல் பொலிவுடன் விளங்கியது. கோயிலிலே மூர்த்தி கருணை வள்ளலாக எழுந்தருளி யிருந்தார். இடப்பாகத்திலே அம்பிகை.

கோயிலிலே மிளிர்ந்த பொலிவு, கலை, அந்தச் சிற்றூருக்கும் பொருந்தி யிருந்தது. அங்கே ஒரு பக்தர் இருந்தார் அவர் சிவன் அடியார். 'பிறவிப் பிணியைப் போக்கி ஞான ஒளியை நல்கும் 'நமச்சிவாய' என்ற பஞ்சாட்சர ஜபம் தான் அவருக்குப் பேச்சு. அவர் சுவாசிக்கும் காற்றிலே சிவபோதம். அவர் பார்வையிலே, அயனும் மாலும் தேடியறியா எம்பெருமான் திருவுரு.

'நீயென நானென வேறில்லை' என்று தாயுமான சுவாமிகள் கூறியபடி அப்பக்தர் சிவத்தியானத்தில் ஒன்றி வாழ்ந்து வந்தார். 'வாழ்வு மாயம்' என்ற நினைவு எழுந்து, சிவமோகம் எழுந்த நாளிலிருந்து அந்தப் பக்தர், அச் சிற்றூரின் கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானின் சௌந்தர்ய காட்சியைக் கண்டு, மெய்யுருகி, உடல் சோர, கண்ணீர் மல்க வாயாரப் பாடித் துதிக்காமல் போக மாட்டார்.

நீண்டகாலமாக பக்தர் இப்படிச் சிவத்தியானத்தில் ஈடு பட்டிருந்தார். ஆனாலும் அவருக்கு உள்ளத்திலே திருப்தி உண்டாகவில்லை. ஏதோ ஒருவித குறை இருப்பது போல் உணர்ந்தார். அது, தான் எம்பெருமானின் திவ்விய சௌந்தரியத்தைப் பார்க்கக் கொடுத்திருக்க வில்லையே என்ற ஏக்கம்.

யோகவழி நின்றுநான் யோகதனம் பெற்றுய்வ(து)
ஏகனே எந்நாள் எளியேற் கியம்பாயோ.

பெரிய அடியார்கள் எல்லாம் எப்படிப் பரவித் துதித்து அவனடி சேர்ந்துள்ளார்கள் என்று எண்ணினர். பால் மணங்கமழும் சம்பந்தரும், தெய்வத் திருக்கோலம் பூண்ட தாயுமானரும், வில்லேந்திய வேடன் கண்ணப்பனும் அவர் நினைவிலே புரண்டனர். பக்தர் அவர்கள் ஒவ்வொருவர் செயலையும் எண்ணிப் பார்த்தார். அவர் உள்ளம் உவந்தது; உடல் சிலிர்த்தது.

'திருஞான சம்பந்தர் எவ்வளவு அழகாக சொற்களைக் கொண்டு பாமாலைகள் சூட்டினர்' என்று எண்ணினர். பக்தரின் கண்கள் கலுழ்ந்தன; உள்ளம் கசிந்தது; மேனி மயிர்க்கூச் செறிந்தது.

"ஈசா, என்னிடம் 'தொகுக்கவோ நல்ல சொல் மலரில்லை'யே" என்று மெய்விதிரக் கூறினர். ஆம், அப் பக்தருக்கு அவன்புகழ் பாடிப்பரவத் தெரியவில்லை. அந்த உண்மையை எம்பெருமான் முன்னிலையிலேயே சொல்லி விட்டார். அடுத்த உண்மையையும் அவரே சொல்கிருர்:

'நான் துதிக்கவோ பத்தி சுத்தமுமில்லை'

ஆண்டவனைத் துதித்து வழிபட வேண்டுமானல் ஓயாதபக்தியும் சிரத்தையும் வேண்டும். உடல் சுத்தமுடன், உள்ளம் சுத்தமும் அவசியம்: அப்பொழுதுதான் அருமை யாகத் துதிக்க முடியும். அந்த நிலையிலும் நான் இல்லை என்பதைப் பக்தர் முறையிடுகிருர்.

ஆனல் வெளியில் 'சிவா, சிவா' என்று சொன்னல் மட்டும் தானு பக்தி! அப்படியுமில்லை. உள்ளத்தில் ஆணவ மாதி மலங்களைப் போக்கி, அவன் திருவுருவை நிலைக்கச் செய்திருப்பவரே அவன் அடியார் போலும். இதுவும் அந்தப் பக்தருக்குத் தெரியும். ஆனல்...?

'உள் உடுக்கவும் மனம் என் வசமில்லை'

மனம் என்பது குரங்கு; மரத்திற்கு மரம்-எண்ணத் திற்கு எண்ணம் தாவக்கூடியது. 'அப்பா கருணைக்கடவுளே' என்று எண்ணினல், அடுத்த கணமே புற உலகிலுள்ள எதையாவது நாடி ஓடும்.

உம்பர் துயர் தவிர்த்து உய்வித்த வீராவுன்
அம்புயமாம் தாளிலெனை அரவணைத்த லாகாதோ.

இந்த 'மனக் குரங்கை' நன்கு அறிந்தவர் அருண கிரியார். அவர் முருகப் பெருமானை மோட்சமா கேட்கிறார்? இல்லவேயில்லை. 'அருளைக்' கேட்கிறார். அதுவும் எந்த விதமான அருள்?

'அருள்வாயே முருகா அருள்வாயே
அன்பொடு துதிக்க **மனம்** அருள்வாயே'

வேலை செய்யாத சோம்பேறிகளுக்குத் 'தகுந்த சாமான் இல்லை' என்பது ஒரு சாக்குபோல, இந்த மனத் துக்கும் மறதி என்பது ஒருசாக்கு. புறஉலக உணர்ச்சியில் ஈடுபட விழையும் நேரத்தில் **மனம்** மறதி என்ற போர்வை யில் நம்மை மறைத்துவிடும். இதையறிந்த அருணகிரிநாதர் முருகப் பெருமானை வேண்டுகிறார்.

ஒரு போதிலும்உன் இருதாளினை
மறவா வரமும் தருவாயே!

ஆண்டவனைத் துதிக்கும் பக்தர்கள் தங்கள் நலனுக்குத் தேவையானவைகளை யாசிக்கக் கேட்டிருக்கிறோம்; பார்த் திருக்கிறோம். ஆனால் இவர்யாசிப்பது? ஆம். உண்மையான மெய்யடியார்களின் தேவை — அவன் செந்தாமரைத் திருவடிகள் தான்.

மனம் தான் இப்படி அந்தப் பக்தரின் வசமில்லை. ஆனால் புற உலக இச்சைகளை விடுவதற்காகவாவது முடிகிறதா அவரால்?

'ஊழ் உற்ற ஆணவ மாதி மலங்களைத்
தடுக்கமோ திடமில்லை'

முன்வினையால் தொடர்ந்துவரும் மதமாச்சரியங்களைத் தடுப்பதற்கும் அவருக்குத் திடமில்லையாம். அதாவது, 'முன்வினைத் தொடரை அறுப்பதற்கு நீ ஒருவனே பொருத்தமானவன். நீயே வாளாவிருக்கும் போது யான் யாது செய்ய இயலும்' என்ற முறையிடுதான்.

அடுத்தாற் போலவே அந்தப் பக்தர் கூறிவிடுகிறார்: 'என் மட்டிலே தயவு தானினக்கில்லை' என்று.

எவ்வளவோ அடியார்களைக் கடைக்கணித்து அருள் புரிந்திருக்கிறாய். ஆனால் என் மாட்டு மட்டும் நீ தயை

**மனத்தூயர் பாலுறையும் மாதேவர் மைந்தா
கனத்தவேல் கையாய் எனையணைத்துக் காவாயோ.**

காட்டவில்லை' என்று குற்றம் சாட்டுவது போலப் பேசுகிறார் பக்தர்.

'நல்ல சொல் மலரில்லை; பத்தி சுத்தமில்லை; மனம் இல்லை; ஊழ் அளித்த ஆணவம் உண்டு; எம்பெருமான் தயவும் இல்லை; இந்த எல்லாவற்றையும் சேர்த்து எண்ணிப் பார்க்கிறார் அவர். அந்நிலையில் தான் அந்தப் பக்தர் ஒரு பெரிய உண்மையை ஒப்புக் கொள்கிறார்.

'உயிரையும் விடுக்கவோ மனமில்லை'

எவ்வளவு அரிய உண்மை தெரியுமா? 'நீ அளித்த உடல்; அதை நான் போக்கிக் கொள்ளலாமா? அப்படி உன் கட்டளையை மீறி நடக்க எனக்கு மனமில்லை என்று கூறுகிறார் பக்தர்.

ஆண்டவன் கொடுத்த உடலையும் உயிரையும் வைத்துக் கொண்டு செயலாற்றுகிறோம் நாம். அதை இடையில் பிரிக்க நாம் யார்? இதுவே அந்தப் பக்தரின் மனநிலை.

'என்னுயிரே இன்னமுதே எம்பிரானே வா வா!' என்று ஒரு பக்தர் தன் உயிரையே இந்தக் கடவுளாக எண்ணி, அறை கூவி அழைக்கவில்லையா? அதனால் தான் பக்தரும் 'மனமில்லை' என்று கூறினார்.

இத்தனையும் 'இல்லை' என்ற பிறகு 'என் செய்குவேன்?'

'விளங்கு மன்றில் விளங்கிய வள்ளலே' என்று விளித்து, எப்பொழுதும் கேட்பவர்களுக்கு வரையாது அருள் பாலித்த வள்ளல்தான் அவன். அதை நினைத்து 'வள்ளலே' என்றார் பக்தர்.

இந்தப் பக்தர் யார் தெரியுமா? அருள்ஜோதி வடிவான ராமலிங்க சுவாமிகள்தான், அவர் அநுபவித்த தவிப்பே பாட்டாக திகழ்கிறது. முழுப் பாட்டையும் இப்போது பார்க்கலாம்.

'தொடுக்கவோ நல்ல சொல் மலரில்லை நான்
துதிக்கவோ பத்தி சுத்தமு மில்லைஉள்
உடுக்கவோ மனம் என்வசமில்லை ஊழ்
உற்ற ஆணவமாதி மலங்களைத்

தடுக்கவோ திடமில்லை என்மட்டிலே
தயவுதா னெனக்கில்லை உயிரையும்
விடுக்கவோ மனமில்லை என்செய்குவேன்?
விளங்கு மன்றில் விளங்கிய வள்ளலே!

இந்த பாட்டைக் காதாரக் கேட்டபிறகும், 'விளங்கு மன்றில் விளங்கிய வள்ளல்' சும்மாயிருப்பானா? அவன் அடியார் திருக்கூட்டத்தில் பக்தரையும் ஓர் அடியாராகச் செய்து விட மாட்டானா? அடியார்க்கு அடியார் ஆகிவிட மாட்டாரா பக்தர்! அதைவிட பேறு என்ன இருக்கிறது!

கந்தர் அநுபூதி -3

(கி. வா. ஜகந்நாதன்)

(349-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முருகன் திருக்கரத்திலே இருந்து அவன் சொன்னதைச் சொன்ன கிளி அருணகிரிநாதர். அந்தக்கிளி பாடிய பாட்டு கந்தரநுபூதி என்று சொன்னர். அதைக் கதையாக வைத்துக் கொள்ளலாமே. கதையினுடைய தத்துவத்தை உணர்ந்து பார்த்தால் அருணகிரிநாதர் பாடல்களுக்குள்ளே உலக அநுபவத்தை விட்டு இறைவனுடைய அனுபவத்திலே தோய்ந்து நின்று பாடிய பாட்டு இது என்று தெரிந்து கொள்ளலாம்.

அவர் அதைத்தானே வேண்டினர்? எத்தனையோ பாடல்களைப் பாடியவர் அவர். பாடாமல் இருக்கின்றவர், பாடிக் கஷ்டப்பட்டவர், இரண்டு மூன்று பாட்டுப் பாடுவதற்குள்ளே தளர்ச்சி அடைந்தவராக நின்று, "ஆண்டவனே! நான் பாடவேண்டும்" என்று கேட்கவில்லை யென்று, சந்தப் பாட்டுக்களை யெல்லாம் அற்புதமாகப் பாடினர். உலக அநுபவங்களை யெல்லாம் அணி அணியாகப் பாடினர். இறைவனுடைய திருக்கோலங்களை எழிலெழிலாகப் பாடினர். பாரதத்திலுள்ள செய்திகளையும், ராமாயணத்தில் உள்ள செய்திகளையும், பராசக்தியினுடைய திருநாமங்களையும், விநாயகப் பெருமானுடைய கீர்த்திகளையும், சிவபெருமானுடைய திருவிளையாடல்களையும் அங்கங்கே நினைத்து நினைத்துத் திருப்புகழைப் பாடியிருக்கிறர். மிகமிக விரிவாக அமைந்

பண்ணவர்கள் பாடும் பரம்பொருளே ஈராறு
கண்ணுளா கந்தா கனிந்தருளைச் செய்யாயோ.

திருக்கிற பாடல்கள் அவை. ஆனாலும் அவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. சாரமான ஞானமணமுடைய அநுபூதியைப் பாட வேண்டுமென்று விரும்பினர்; அந்த விருப்பம் நிறைவேறியது.

இந்த நூலுக்குக் கந்தர் 'அநுபூதி' என்று பெயர் வைத்தார். கந்தன் என்பது முருகனுடைய திருநாமங்களுக்குள்ளே ஒன்று. ஸ்கந்தன் என்ற வடமொழிச் சொல் தமிழில் கந்தன் என்று வந்தது. கந்து—பற்றுக்கோடு; கந்தம் என்பதுடைய திரிபு. உயிர்களுக்கெல்லாம் தனிப்பற்றுக் கோடாக இருக்கின்றவன் எவனே அவன் தான் ஆண்டவன். உலகத்திலுள்ள மற்றவற்றையெல்லாம் பற்றுக்கோடாக எண்ணி, அதனாலே விளைகின்ற துன்பங்களில் ஈடுபட்டு மேன்மேலும் பிறவிக்கு ஆளாகிறவர்கள் உயிர்கள். அந்தப் பற்றுக்க ளெல்லாம் போகவேண்டும்.

இறைவனிடத்திலே வைத்திருக்கிற பற்றுக்கும் உலகத்திலே இருக்கிற பற்றுக்கும் வேறுபாடு உண்டு. உலகத்திலுள்ள பற்றெல்லாம் துன்பத்தைத் தருவன. உலகத்திலுள்ள பற்றுக்குப் பற்று என்றும், பந்தம் என்றும், ஆசை என்றும் பெயர். "ஆசை படப்பட ஆய்வரும் துன்பம்" என்று திருமூலர் பாடுகின்றார். உலகத்திலே பிறவி தோற்றுவதற்கு மூலகாரணமாக இருப்பது அவா என்று வள்ளுவர் சொல்லுகின்றார்.

"அவா வென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்று பேசுகின்றார். ஆனால் இறைவனிடத்திலே உள்ள பற்றோ அன்பு என்ற பெயர் பெறுவது. பக்தி என்றும் அதனைச் சொல்லுவார்கள். அந்தப்பற்று இந்தப் பற்றை நீக்கும். இந்தப் பற்றை நீக்கிக்கொண்டு இறைவனை அடையலாமென்றால் அது நடவாத காரியம், இந்தப் பற்று இருக்கும் பொழுதே ஆண்டவனைப் பற்றிக் கொண்டால் இது ஒழிந்துவிடும். உலகத்திலுள்ள பற்றையெல்லாம் போக்கிக் கொண்டு ஆண்டவனை நாடலாம் என்று இருக்கக் கூடாது. உலகத்துப் பற்று இருக்கும் பொழுதே இறைவனுடைய திருவடிப்பற்றை இறுகக் கட்டினால் அப்பொழுது உலகப் பற்றுத் தானே கழன்றுவிடும். இதை வள்ளுவர் சொல்லுகிறார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

வந்தனைசெய் வஜ்ஜிரவேல் வன்பிணிகள் நீக்கும்வேல்
கந்தவேல் உண்டெற்கு காப்பென்று கருதுவனே.

நமக்குப் பற்றுவிட்டால்தான் இன்பம் என்பது உண்மை. ஆனால் பற்றுவிட்ட பிறகு இறைவனைப் பற்றுவாம் என்றால் நடவாத காரியம்; அந்தப்பற்று விடுவதற்காகவே இறைவனுடைய பற்றைப் பற்றவேண்டும். இறைவனுடைய அருளின்பத்தை அடைவதற்கு உலகப்பற்று போகவேண்டும். ஆனால் உலகப் பற்றுப் போவதற்கே இறைவனுடைய பற்று ஆதாரம். மிக்க பசியோடும் தாகத்தோடும் வருகின்ற ஒருவனுக்கு முதலில் ஒரு தம்ளர் தண்ணீர் கொடுத்துவிட்டு அப்புறம் இலையைப் போட்டுப் பரிமாறினதுபோல, இறைவனைப் பற்றிக்கொண்டால் முதலில் இந்த உலகப் பற்றையெல்லாம் அந்தப் பற்று போக்கிவிடும். அப்பாலே இன்பத்தையும் உண்டாக்கும். டாக்டரிடத்திலே சென்றால் உடம்பிலே உள்ள நோயைத் தீர்ப்பதற்கு மருந்து கொடுக்கிறார். நோயெல்லாம் தீர்ந்த பிற்பாடு மெலிவைப் போக்குவதற்கு 'டானிக்' கொடுக்கிறார். இந்தமாதிரி இறைவனுடைய பற்றானது இந்த உலகப் பற்றாகிய நோயைப்போக்கி, அப்புறம் இன்பமாகிய வளத்தை நமக்குத்தரும். எனவே இறைவன் தான் எல்லாப் பற்றுக்களுக்கும் மேலான பற்றுக்கோடு. எல்லாப் பற்றுக்களையும் அழிக்கும் பற்றுக்கோடாக இருக்கின்றான். அதனால் அவனைக் கந்தன் அல்லது பற்றுக் கோடாக நிற்பவன் என்று சொல்லுகிறோம்.

மற்றொரு பொருளையும் கந்தன் என்பதற்குரியதாகக் கந்த புராணம் சொல்லுகிறது. முருகன் சிவபெருமானுடைய அம்சமாக உதித்தவன். பரப்பிரம்மமாகி இருக்கின்ற பெரியவன். அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய் நின்ற பெருங்கடவுள். உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் உய்ய வேண்டி உருவம் எடுத்து இறங்கி வருகின்றான். அதற்கு அவதாரம் என்று பெயர். அவதாரம் என்றால் இறங்குதல் என்று பொருள். மனங்கடந்து, பொறி கடந்து, உலகம் கடந்து, காலங்கடந் திருக்கின்ற பரம் பொருள், உலகத்துக்குள்ளே காலத்துக்குள்ளே அகப்பட்டுள்ள ஆருயிர்களுக்கு அருள்செய்ய வேண்டிக் காலத்துக்கும் இடத்துக்கும் அகப்பட்டவனைப்போல, உருவமும் பெயரும் படைத்தவன் போல, வருகின்றான். அப்படி எத்தனையோ பெயர்களையும் உருவங்களையும் எடுத்திருந்தாலுங்கூட, மக்களுடைய உள்ளத்திலே நன்றாகப் பதியவேண்டும் என்று நினைந்து மீட்டும் புதிய உருவத்தை எடுத்தான். பலகாலமாக அச்சில் இருக்காத புத்தகத்தை, மிகவும் அழகான சித்திரங்கள் எல்லாம் போட்டு இந்தக்

வென்ற விசித்திரவேல் வித்தகவேல் கந்தன்வேல்
என்றும் எனைக்காக்கும் எனக்குக் குறையுண்டோ.

காலத்துக் கேற்ப ஒரு புதிப்புக் கொண்டு வருவது இல்லையா? அது 1956-ஆவது வருஷத்துப் பதிப்பு என்று சொல்லுகிறோமே, அதுமாதிரி, பல காலமாக எத்தனையோ திரு உருவங்களையும் திருநாமங்களையும் பெற்ற கடவுளுக்கு அத்தனை இருந்தும் மக்கள் உய்வு பெறாமல் வீணாக மாய்ந்து ஒழிகிறார்களே என்ற கருணை உண்டாயிற்று. இன்னும் ஒரு புதிய 'எடிஷன்' போட்டு விடலாம் என்று நினைத்தார். அஞ்சு முகத்தை ஆறாக்கினார். பத்துக் கையைப் பன்னிரண்டு கைகளாக்கினார். அப்பொழுது புதிய மலர்ச்சி பெற்ற இளங்குழந்தையாகிய முருகன் எழுந்தருளினான். உலகத்திலுள்ள ஆருயிர்கள் பயன்பெற வேண்டும் என்று எழுந்தருளியவன்; ஆகையினாலே அவர்களைப்போலவே வரவேண்டும். அதனால்தான் இறைவனும் முகமும் கையும் உடையவனாக இருக்கிறான். மனிதனைப்போல முகமும் கையும் இருந்தாலும் கூட மனிதர்களைப் போலில்லாமல் அதிக முகமும் அதிகக் கையும் உடையவனாக இருக்கிறான். அவன் அதிக ஆற்றல் உடையவன். நிறையக் கொடுக்கும் வன்மை யுடையவன் என்பதை அவனுடைய மிகுதியான கைகள் காட்டுகின்றன.

உலகத்துக்கு எழுந்தருளும் பொழுது உலகினரை வரவேண்டும் என்று நினைக்கிறான்.

உலகம் என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உண்டானது. இங்கே வந்தால் பூதங்களுடைய தொடர்பு உண்டாக வேண்டும். நம்முடைய உடம்பிலே பூதங்களுடைய தொடர்பு உண்டு. ஆனால் அஞ்சறைப் பெட்டியிலிருந்து செய்த சமயலைப்போலப் பூதங்களின் சிறு சிறு அம்சங்களெல்லாம் சேர்ந்தது நம்முடைய உடம்பு. இறைவன் உடம்பு எடுத்துக்கொள்ள வேண்டுமானால் நம்மைப்போல நாற்ற உடலையா எடுப்பான்? அவன் திவ்ய மங்கள சரீரத்தைப் பெற்று வருவான். அந்தச் சரீரத்துக்கும் பூதத்தினுடைய சம்பந்தம் இருக்கும். ஏனென்றால் பௌதிக உலகத்திற்கு வரும்பொழுது பூதசம்பந்தம் இல்லாவிட்டால் இறங்க முடியாது. நெடுகப் பறக்கின்ற ஒரு வஸ்துவைக் கீழே இறக்க வேண்டுமானால் அதில் கல்லைக்கட்டிவிட வேண்டும். அப்பொழுது தான் கீழே இறங்கும். பழைய காலத்திலே வானக்கப்பலைக் கட்டினவர்கள் அப்படித்தான் செய்வார்களாம். அவ்வாறே இறைவனுக்கும் கல்லைக்கட்டிக் கொண்டு இறங்கவேண்டும் என்ற கருணை பிறந்தது. அவன் கட்டிக் கொண்டான். பௌதிகமாகிய

உள்ளத்தில் தோன்றும்வேல் உக்கிரவேல் சத்திய
[வேல்
துள்ளிவரும் வேலே துணையென்பன் தூயோனே.

கல்லைக் கட்டிக்கொண்டான். அதைத்தான் கந்த பிரான் திருஅவதாரம் சொல்லுகின்றது.

அவன் ஐம்பெரும் பூதங்களின் சம்பந்தத்தைப் பெற்றனும். ஆகாசமயமா யிருக்கின்றவன் சிவபெருமான். அவனுடைய திருக் கண்கள் அக்கினி மயமாக இருப்பவை. ஆகாசத்திலிருந்து கண்ணுகிய அக்கினிக்கு வந்து, அங்கிருந்து அக்கினிப்பொறியாக, முருகன் எழுந்தருளினன். பிறகு அந்தப் பொறியைவாயு ஏந்திக் கொண்டு வந்தான். அக்கினி ஏந்திக்கொண்டு வந்தான். ஆகாசம் அக்கினி, வாயு இந்த மூன்றின் சம்பந்தம் உண்டாகி விட்டது. அதற்குப் பிறகு அந்த அக்கினி தாங்காமல் கங்கையினிடத்திலே கொடுத்தான் என்று கந்த புராணம் சொல்லுகிறது. கங்கை அப்பு என்ற பூதம். பொறிகளைக் கங்கை கொண்டு போய்ச் சரவணப்பூம் பொய்கையில் மண்திட்டிலே சேர்த்து விட்டாள். கங்கை அப்பு, மண்திட்டு பிருதிவி, சிவபெருமான் ஆகிய ஆகாசத்திலே பிறந்து அக்கினியிலும் வாயுவிலும் ஏந்தப்பெற்று, அப்புவாகிய கங்கையினலே வகிக்கப் பெற்று, கடைசியிலே பிருதிவியில் வந்து தங்கினன். ஐம்பெரும் பூதங்களோடு அவன் தொடர்பு அடைந்த கதையே ஆண்டவனுடைய திரு அவதாரக் கதை.

அந்த ஐந்து பெரும் பூதங்களோடு வந்தவன் ஆறுவேறு குழந்தைகளாக வந்தான். ஆறு வேறு குழந்தைகளாக இருந்தால் உலகத்துக்கு யார் தெய்வம் என்று சொல்வது? ஆறுதெய்வமா? இல்லையே! இறைவனுடைய திருவுருவம் முழுவதும் ஞானம். ஞானம் மாத்திரம் இருந்தால் போதாது. அந்த ஞானம் உலகத்துக்குப் பயன்பட வேண்டுமானல் அருளும் வேண்டும். எத்தனை தான் ஈயக்கட்டியைக்கொண்டுவந்து உருக்கினலும் அது பாத்திரத்தில் ஒட்டாது. கொஞ்சம் நவாசாரப் பொடியைத் தூவினல்தான் ஈயம் பாத்திரத்தில் ஒட்டும். அதுமாதிரி இப்பொழுது நல்ல ஈயம் போல ஞானஸ்வரூபமாகிய ஆண்டவன் வந்து விட்டான்; முருகன் எழுந்தருளினன்; ஆறு திருவுருவமாக எழுந்தருளினன். ஆனல் ஒட்டவில்லை. ஆறும் ஒட்டுவதற்குத் திருவருள் உருவமாயிருக்கின்ற எம்பெருமாட்டி வந்தாள். அவள் தன்னுடைய திருக்கரத்தினலே ஆறு குழந்தைகளையும் ஒரு சேர எடுத்தாள். அந்தக் குழந்தைகள் ஒன்ருகி ஆறுமுகமும் பன்னிரண்டு கரங்களுமுடைய மூர்த்தியாகி விட்டன. அவள் ஒன்று சேர்த்தமையினலே கந்தன் என்று பெயர் வந்ததாக கந்தர் கலிவெண்பாச் சொல்லுகின்றது.

(தொடரும்)

மடியப் பகையழிக்கும் மாஞான வேல்வினையைக்
கடியும் என்றெண்ணிக் கருத்திருத்திப் போற்றுவனே.

புல்வாயும் புலியும்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)

"புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி"—புல்வாய் என்பது கலைமான். இது 'இரலை' என்னவும் படும். 'இரலை புல்வாய் என்னலாகும்' என்பது பிங்கலம். "படையும் பூதமும் பாம்பும் புல்வாயதள் உடையுந் தாங்கிய உத்தமனூர்' என்பது அப்பர் தேவாரம் (5.67.1). 'புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி' என்றார் மணிவாசகனார்—திருவாசகம் போற்றித் திரு அகவலில். இறைவன் புலி முலையைப் புல்வாய்க்கு அருளியது திரு ஆலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் 53 ஆவது திருவிளையாடல். இந்தத் திருவிளையாடலிற் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலுள்ள திருநகரங்கண்ட திருவிளையாடல் கூறப் பட்டுளது. முன்னாளில் மதுரை கடம்பவனம் என்னப் படும். இந்த வனத்தில் ஒரு மான் தான் ஈன்ற இளங் கன்றை ஒரு சிறு புதரின் மாட்டு ஒதுக்கி வைத்துவிட்டு, வெயிலால் உலர்ந்து எங்கும் வறண்டிருந்த அந்தக் காட்டில் நீர் வேட்கையால் அலைந்து திரிந்து ஒரு நீர் நிலையைக் கண்டு நீரைப் பருகும் போது, அங்குப் பசியால் வருந்தி ஒளிந்திருந்த வேடன் ஒருவன் அந்த மானைக் கண்டு மகிழ்ந்து அம்பு எய்தி அதை வீழ்த்தினான். அம்பு பட்ட அந்த மான் தன் கன்றை நினைந்து அழுது அழுது உயிர் விட்டது. அப்போது எல்லா உயிர்க்கும் தாயாகி எவ் விடத்தும் நிற்கும் எம்பெருமான், இறந்த அந்த மான்மீது இரக்கங்கொண்டு அங்கு இருந்த ஒரு புலியை அந்த மான் கன்றுக்கு பால் ஊட்டும்படி ஏவினர். புலியும் இரக்கத் துடனும், அன்புடனும் அந்த மான் கன்றை அணுகத், தாயின் வரவைக் காணாது தவித்துத் தளர்ந்திருந்த அந்த மான் கன்று வந்த புலியை அணுகி வால் குழைத்து, நேர்

கவலைதனை நீக்கிக் களிப்பருளும் செவ்வேலே
கவசமெனக் கொன்று கருதஅருள் செய்வாயோ.

வந்து, பயந்தணிந்து, தூய முலைப்பாலுண்டு துள்ளி விளையாடிற்று. இயற்கையிற் புலிக்கு மான் மிக அஞ்சும்.

['திக்கட் புலி தொடரச் செல்லுஞ் சிறு மான் போல்' [நளவெண்பா]. "புல்வாயினத்திற் புலி புக்காங்கு" [பெருங்கதை].] இங்ஙனம் இருக்க, இயற்கைக்கு விரோதமாய் விதியையும் மாற்ற வல்ல ஒரு ஆடலைச் சிவபிரானன்றி வேறு யார் செய்ய வல்லார்?

இந்தத் திருவிளையாடல் [கல்லாடத்தில்-42]

"தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் துளிமுலை
பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட
அருள்நிறை பெருமான் இருள்நிறை மிடற்றோன்!"

எனப் பாராட்டப்பட்டுள்ளது. 'பொன்னெயிற் கடம்ப வனத்த புல்வாய்க்குப் புலிமுலை யளித்த புண்ணியம்போல்' [திருக்காளத்திப் புராணம்-பரத்துவாச-59] என வருவதுங் காண்க. "மதுரைப் புது மண்டபத்திற் கீழைக் கோடியிலுள்ள பெரிய கருங்கல் தூணொன்றிலும், திருப்பரங்குன்றத்தில் துவஜஸ்தம்ப மண்டபத்தில் வடபாலுள்ள பெரிய கருங்கல் தூண்களுள் ஆறுவதிலும், சிவபெருமானுடைய திருவுருவம் புலியைக் கொண்டு புல்வாய்க் கன்றிற்குப் பால் அருத்திய வண்ணமாகப் பெரியோர்கள் அமைத்திருத்தல், பண்டைக் காலத்தில் இத் திருவிளையாடல் நிகழ்ந்ததென்பதை நன்கு விளக்குகின்றது என்பது, டாக்டர் மகா மகோபாத்தியாயர் சுவாமிநாதையர் அவர்கள் குறித்துள்ள குறிப்பு:

"மாலொடு தேவர் மகிழ்ந்தேத்து நீப வனத்துழையைக்
கோலொடு வேடுவர் கொல்லக்கண் டேயதன் குட்டிக்குத்தாய்
போலுடன் வந்தந்தப் புல்வாய் மறிக்குப் புலியை முலைப்
பால்கொடு என்னும் சொக்கே பரதேசி பயகரனே"'

—திருவிளையாடற் பயகரமாலை 53.

தாங்கும் அயில்வேல் தனந்தரும் துய்யவேல்
ஓங்குவேல் காப்பெற்கு உண்டென் றுருகுவனே.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(சே. த. ராமலிங்கம் பிள்ளை பி. ஏ., பி. டி.)

(364-ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. திரு ஆனைக்கா :—(அப்புத்தலம்)

பிருதிவி தலமாகிய காஞ்சிப் பதிக்கு அடுத்த அப்பு (நீர்) தலமாக விளங்குவது திரு ஆனைக்கா ஆகும். இந்த இரண்டு பதிகள் வெவ்வேறு நாட்டைச் சேர்ந்தவை. காஞ்சி தொண்டை நன்னாட்டது. திரு ஆனைக்கா, பொன்னி நன்னாடான சோழ நாட்டது. ஆயினும் வரலாற்றுப்படித் தொண்டை நாடு சோணாட்டின் ஒரு பகுதியாக இருந்து தொண்டைமானுக்குத் தரப்பட்டது என்பர். ஆதலின் வரலாற்றினால் இரு நாட்டிற்கும் ஒற்றுமை காணலாம். ஆனால் நம் அருணகிரிநாதர் வேறொரு வகையில் ஒற்றுமை காண்கிறார். காஞ்சியில் தேவி சிவனாரைப் பூசிப்பது போலே, திருவானைக் காவிலும் தேவி (அகிலாண்ட நாயகி) சிவனாரை முப்போதும் வழிபாடு ஆற்றுகிறார். இதற்குச் சான்றாக இன்றும் உச்சிக் கால வழிபாட்டில் அம்மன் கோயில் குருக்கள் அம்மனைப் போல வேடந் தாங்கி அரனாரை வந்து அர்ச்சிக்கிறார். எனவே இருதலங்களும் அரனாரை அம்மன் வழிபட்ட ஒற்றுமையாலும், பிருதிவி தலத்துக்கு அடுத்த அப்புதலமாக திரு ஆனைக்கா அமைவதாலும், திரு ஆனைக்காத் திருப்புகழில் காஞ்சி காமாட்சி பெயரும் அமையக் குறிப்பிடுகிறார்.

"கருதலர் திரிபுரம் மாண்டு நீறெழ
மலைசிலை ஒருகையில் வாங்கு நாரணி
கழலணி மலைமகள் காஞ்சி மாநகர்—உறைபேதை
களிமயில் சிவனுடன் வாழ்ந்த மோகினி
கடலுடை உலகினை ஈன்ற தாய்உமை
கரிவனம் உறை அகிலாண்டநாயகி—அருள்பாலா".

ஆக்கும்வேல் காக்கும்வேல் அழிக்கும் மறைக்கும்வேல்
வாக்களித்தே என்னை வாழ்விக்கும் வேலிறையே.

ஆகையால் இனி நாம் காஞ்சிக் கடுத்ததாய்க் கருத வேண்டுவது ஆனைக்கா என்னும் கரிவனமே ஆம் என்க.

இத்தலம் அப்புத்தலம் என்பதற்கேற்பக் கோயிலின் மூலத்தானத்தில் எப்போதும் நீர் நிரம்பியே நிற்பதைக் காணலாம்.

ஆனைக் காவின் இருப்பிடம் :-

இது வைணவர்களது 'பெரிய கோயிலான' திருவரங்கத்தருகில் உள்ளது. இக்கால வண்டி வசதிப்படி ஸ்ரீ ரங்கம் ஸ்டேஷனில் இருந்து கிழக்கில் அரை மைல் தூரத்தில் இத்தலம் உள்ளது. நம் அருணகிரியார் வண்டி வசதியில்லாத காலத்தில் வழி நடந்தே திருத்தல யாத்திரை செய்து வரும்போது திரு ஆனைக்காவை நோக்கி வருகிறார். ஸ்ரீ ரங்கநாதர் சன்னிதியும், அங்கு ஆறங்க முணர்ந்த ஸ்ரீ வைணவ அந்தணாளர்கள் சிரங்கராசனை 'ஹரி ஹரி கோவிந்தா கேசவா' எனப் போற்றுதல் கேட்கிறார். சேயோன் ஒருவனையே பாடுவது திருப்புகழ் நாவலரது நியமம். ஆயினும் ஏனைய வழி பாட்டில் வெறுப்பில்லை. ஆதலின் அவ் வழிபாட்டைத் திருப்புகழில் மெள்ளச் சேர்த்து அதனை அயில் பெருமானாரது அன்புடைய மாமனார் புகழாக

> "கருதிய ஆறங்க வேள்வி அந்தணர்
> அரிகரி கோவிந்தா கேச வென்றிரு"
> கழல்தொழு **சிரங்க ராசனன்புறு — மருகோனே**

என்று பாடுவதைப் படித்து மகிழுங்கள். எனவே திரு ஆனைக்கா சிரங்கத்தை அடுத்துள்ளது என்றும் அறிந்தோம்.

மூவர் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம்.

தேவாரப் பாடல்கள் ஏழிசையால் அமைந்து இசைப் பயனுடை இறைவனைப் புகழ்வன. ஆளுடைய பிள்ளையாரே தமது பாடலை 'ஏழின் இன்னிசை மாலை' என்கிறார். ஆதலின் தேவாரப் பாடல்களை ஏழிசைத் தமிழ் என்னலாம். திருவானைக்காவை மூவர் முதலிகளும் பாடியுள்ளனர். மூவர்

பின்னை கேள்வன் மருகா பேரருள்செய் பெம்மானே
அன்னைபோ லன்புடனீ அடியேன்முன் வாராயோ.

தமிழும் ஏழிசையும் கேட்ட முதல்வர் ஆனைக்காவின் அண்ணலாகும் என்பதை

"ஏழிசைத் தமிழில் பயனுற்ற வெண்
நாவலுற்றடியில் பயிலுத்தம
ஈசன் முக்கணிருத்தன் அளித்தருள்—பெருமாளே

எனக் கூறியதாக நமது தணிகைமணி வ. சு. செங்கல்வ ராய பிள்ளையவர்கள் குறிக்கின்றார்கள்.

"தமிழ் வேதச் சோதிவளர் காவைப் பெருமாளே" தேவாரத் தமிழ் மறை பெற்ற சோதியர் திரு ஆனைக் காவில் பெருமாளே

பாணனுர் யாழ்கேட்ட பண்பு

இத்தலத்திற்கு காழிக் கவுணிய ஞானக் கன்றாகிய திரு ஞானசம்பந்தர் எழுந்தருளினர். அவருடன் வந்த திருநீல கண்ட யாழ்ப்பாணரும், பிள்ளையார் பாடலைத் தம் யாழில் அமைத்து இசை பரப்பினர். இச் செய்தியைச் சந்த முனிவர்

"செந்தமிழ்ப் பாணப் பாவலர் சங்கித யாழைப் பாடிய
தென்திரு ஆனைக் காவுறை—பெருமாளே

என்கிறார்.

பெயர்க் காரணம்:

திரு ஆனைக்கா என்றால், அழகிய ஆனை வழிபட்ட சோலை (சூழிடம்) என்று பொருள் படும். உண்மையிலேயே இத்தலத்தில் உள்ள கோயில் தென்னஞ்தோப்பின் இடை யில் அமைந்துள்ளமை காண்க. இங்கு ஆனை என்றது நான்கு தந்தம் தாங்கிய ஒரு வெள்ளை யானையை. இது இந்திரன் வாகனமான ஐராவதம் அல்ல. புட்பவந்தன் என்னும் சிவகணத் தலைவன், மாலியவான் என்ற மற்றொரு கணநாதனுடன் சிவபக்தி காரணமாகப் பொறாமை கொண்டு தன்னையே யானை யாகுமாறு சபித்துக் கொண்டான். அந்த

குமார குணதீதா குன்றெறிந்த தீரா
உமாசுதா என்னுள் என்றும் உறைவாயோ.

வெள்ளை யானை பூசித்த தலமாதலால் 'ஆனைக்கா' 'கய வனம்' 'கஜாரணியம்' என்ற பெயருண்டாயிற்று.

"விறன்மிக்க கரிக் கருள் செய்தவனே" (சம்பந்தர்)
"வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டதற்கு வீடுகாட்டி" (அப்பரடிகள்)
"நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்" (சேக்கிழார்)
"செறிகவுள் கடாத்த ஆனைக்கு ஆரருள் புரிதலின்
ஆனைக்கா வாயிற்று" (திரு ஆனைக்காப் புராணம்)

சம்புகேச்வரம்

இத்தலத்திற்கு சம்புகேச்சுவரம் என்ற ஒரு பெயரும் உண்டு. நம் நாட்டினை 'நாவலந்தீவு' அல்லது 'சம்புத் வீபம்' என்று கூறுவது வழக்கம். ஏனெனில் இங்கு நாவல் (சம்பு) மரங்கள் அதிகம். இவ்வாறு நாவல் மரங்கள் நிறைந்த காடொன்றில் சம்பு என்ற முனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் முன்னே 'வெண் நாவல் கனி' ஒன்று விழுந்தது. உடனே முனிவர் அதனைக் கயிலை அரனுருக்கு நிவேதித்தார். பெரியோர்கள் தமக்குக் கிடைக்கும் எல்லாப் பொருளையும் இறைவற்கு நிவேதித்தே தாம் கொள்ளுவது இயல்பேயன்றோ! இறைவனும் ஓர் அருள் விளையாடலை அகத்துன்னி அக்கனியினை உண்டு விதையினை உமிழ்ந்தனன். அதனைக் கண்ட சம்பு முனிவர் 'இது சிவனார் பிரசாதம்' எனப் போற்றி அவ் விதையை விழுங்கினர். பெரியோர்க்குச் செய்யும் தினைத் துணை யுதவியும் பனைத் துணையாகப் பெருகிப் பயன்தரும். அதுபோலவே சிவனாருக்கு நிவேதித்த நாவல் கனி உருவிற் சிறிதே யாயினும், அம் முனிவரது அன்பும், அதனை விரும்பி யேற்ற கயிலைப் பரமனது கருணையும் போல் அவ் விதை முனிவர் வயிற்றில் முளைத்து வாய் வழியாகத் தழைத்து ஓங்கி நெடுமரமாய் வளர்ந்தது. இறைவன் ஆணைப்படி அம் முனிவர் வெண்ணாவற் பழம் விழுந்த தலத்

ஏதங்கள் வாராமல் எப்பொழுதும் என்னை நீ
பாதுகா கந்தா என்னுமெனைப் பாராயோ.

திலேயே தவநிலை கொண்டுவிட்டனர். பின்பு முனிவர் பெருமானை அந்த நாவல் மரத்தடியிலேயே திருக்கோயில் கொண்டருளுமாறு வேண்டினர். பெருமானும், அது முதல் வெண்ணுவல் அடியிலேயே எழுந்தருளினர். அன்று முதல் சிவனுருக்கு 'வெண்ணுவலரசு' 'ஜம்பு நாதர்' என்ற திருநாமங்கள் வழங்கலாயின. இத்தலமும் ஜம்புகேச்சுவரம் எனப் பேர் பெற்றது.

"ஞான பூமிக்கண் ஒளிர இருப்பாய் உன் நீழலிலே
யாம் உறைவோம் என்ன" (திரு ஆனைக்கா உலா)
"வெண்ணுவலின் மேவிய எம் அழகா." (சம்பந்தர்)
"வெண்ணுவல் விரும்பு மயேந்திரரும்
அண்ணலாரூர் ஆதி ஆனைக்காவே" (,,)

(தொடரும்)

விக்னேஸ்வரம் பிரம்மஸ்வரூபம்

(ஆ. கி. ரங்கராஜன்)

இறைவன் ஒற்றை மருப்புடன் விளங்குதலும் உலக நன்மையின் பொருட்டேயாம். நல்வினை, தீவினைகளில் தீவினையாகிய பாபத்தையும் பாபத் தொழில் புரிவோரையும் ஒற்றை மருப்பு தாக்கி அழிக்கும். இரு தந்தங்கள் இறைவனுக்கு இருப்பின்,அதன் பயனை உத்தமர்களுக்கும் ஊறு விளையுமாதலால் அது கருதியே எம்பிரான் நல்லோருக்கு ஆதரவாகவும் துஷ்டர்க்கோர் தூமகேதுவாகவும் தனது தந்தங்களில் ஒன்றை முறித்துக் கொண்டனன்.

விக்னேஸ்வரனுக்கு மஹத்காய என்றொரு பெயருண்டு. அதாவது பிரம்மாண்ட சரீரத்தை உடையவன் என்பதாம். அணுவினுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்

வாங்கிக் கருணைசெயும் வாழ்வான ஆநந்தா
காங்கேயா கந்தா கனிந்தருளைச் செய்யாயோ.

விளங்குபவன் விநாயகன். ஆகவே அவன் மாபெரும் சரீரத்தை உடையவன் என்பதில் வியப்பென்ன ?

லம்போதர :—பெரு வயிறு உடையவன். சகலபுவனங்களையும் தனக்குள் அடக்கிக் காப்பவனுதலால் அறிஞர்கள் விநாயகனைப் பெரு வயிற்றை உடையவனுகக் கண்டனர். ஐந்தொழில் புரியும் தான் ஊழிக்காலத்தே உலகங்கள் அழியாதவாறு தனது உதரத்தில் (வயிற்றில்) அனைத்தையும் வைத்துக் காக்கும் வல்லமை கொண்டவனும் விநாயகன்.

விசாலாக்ஷ :—அகன்ற கண்களைக் கொண்டவன். அதாவது எவ்வுலகங்களையும், எவ்வுலகில் நிகழ்பவற்றையும் காணும் நேத்ரங்களைப் பெற்றவன். ஆகவேதான் தானவர்கள் விநாயகனின் நாமத்தைக் கேட்ட போதே நடுங்கினர். ஏன் ? அவர்களது கொடிய கடத்தைகளை விநாயகன் எவ்வாறே கண்டறிந்து விடுகிருன் என்பதற்காகவேயாம். சாதுக்கள், அடியார்கள் எவ்விடத்தில் துன்புற்றாலும் கண்டறிந்து தன் கண்ணேக்கினுல் அவர்களை இரக்ஷிப்பவன்.

பாலசந்த்ர விநாயகம், பாலேந்து ஸகலம் மௌளௌ : இளம்பிறைச் சந்திரனைத் தன் முடியில் சூடியவன். ஒரு காலத்தில் நாரத முனிவர் ஒரு மாங்கனியை சிவபிரானிடம் கொண்டு வந்து தந்தனர். சிவபிரானின் இருபுறமும் விநாயகரும் முருகனும் அமர்ந்திருக்க, கனியை யாருக்கு அளிப்பதென ஆலோசித்தனன் கண்ணுதலோன். அவ்வேளையில் அதனைக் கண்டிருந்த நான்முகன் அக்கனியை முருகனிடம் அளிக்குமாறு கூற, விநாயகன் உடனே அயனின் அஞ்ஞானத்தைப் போக்கி உலகில் இறைவன் ஒருவனே என்றும், பல்வேறு சமயங்கட் கேற்ப பரமன் பல உருவங்களில் பக்தர்க்குக் காக்ஷி அளிக்கிறனென்றும்,

---

துட்ட அவுணர்களைத் துண்டிக்கக் கூர்வேலை
விட்டவனே வேந்தே விரைந்தருள வாராயோ.

தாம் வேறு, முருகன் வேறு, சிவ-சக்தி வேறு என்றெல்லாம் எண்ணுதல் தவறுஎன்றும் ஓர் உபதேசம் புரிந்தனன். சதுர்முகன் தன் குற்றத்திற்கு நாணி விநாயகனைப் பணிந்தனன்.

குற்றம் புரிந்தவர் தம் தவறுகளை உணரும்போது நாணமும் வருத்தமும் அடைவர். அதுதான் அவர்களுக்கு முதல் பிராயச்சித்தம். அதை உணராத சந்திரன் அகந்தையுடன் அப்போது அயனைப் பரிகசித்தான். விநாயகன் வெகுண்டு சந்திரனை அழிந்தொழிய சபித்தனன்.

தண்மதியோன் தன் கலை யழிந்து ககனத்தில் காணு தொழிந்தான். ஆதலின் அவனது குளிர்ச்சி நிறைந்த ஒளி உலகில் இல்லாது போக அமரர்கள் ஆகுலம் கொண்டனர். வானவர் தலைவனாகிய முகில்வாகனன் சந்திரனை மீண்டும் தோன்றுமாறு அனுக்ரகிக்கும்படி கணநாதனை வேண்டிக் கொண்டனர். கருணை வள்ளலான கஜமுகன் உளமிரங்கி அம்புலியோன் அவனியில் தோன்ற அருள் புரிந்தனன். சந்திரன் நிகழ்ந்தவற்றை அறிந்து விநாயகனிடம் சரணடைந்து தன்னை மன்னித்தருளும்படிப் பிரார்த்தித்தான். கஜமுகனும் அவன்பால் இரங்கி அவன் குற்றத்தை மன்னித்ததுடன், பிறை வடிவில் தன் முடியில் அவனை அணிந்து கொண்டனன்.

கணநாதன் கலைமதியோனைத் தண்டித்த தினமே ஆவணி மாதத்தில் வரும் விநாய சதுர்த்தி. சந்திரனுக்கு விநாயகன் அருள்புரிந்த நாளே மாசி மாதத்தில் தேய்பிறையில் வரும் சங்கட ஹர சதுர்த்தி. உலகுக்கும் அந்நாள் நன்னாளாகும். இதன் காரணமாகவே இறைவனுக்குப் பால சந்திர விநாயகன் என்ற பெயர் ஏற்பட்டதென பெரியோர் கூறுவர்.

காமரூபதராஹ: விரும்பும் உருவங்களை அடையவன். ஒரு காலத்தில் சூரபத்மனுக்கு அஞ்சி பூவுலகுக்கு

மயில்மிசை ஏறிவரும் மான்மகளார் பங்கா
அயில்வேல் கரமுடைய ஐயா அருளாயோ.

ஓடிவந்த இந்திரன், இறைவனை மலர்களால் பூஜிக்க எண்ணி நந்தவனம் ஒன்று அமைத்தான். அதற்குத் தண்ணீர் இறைக்க வசதியின்றி விநாயகனைப் பிரார்த்தித்தான். விநாயகன் காக உருவில் சென்று பொதிகையில் இருந்த அகத்திய முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்து நதியாகப் பெருகி வர அருள்புரிந்தான். இந்திரன் தனது இஷ்ட சித்தியை அடைந்தான்.

சிவபெருமானிடம் ஆத்மலிங்கத்தைப் பெற்றுப் பூஜித்தவரது ஆயுளும், ஆற்றலும் பெருகுமென்பதை அறிந்திருந்த இராவணன் கைலைக்குச் சென்று ஆண்டவனிடம் வேண்டி ஆத்மலிங்கத்தைப் பெற்று இலங்கைக்குத் திரும்பினன். இராவணனின் வலிமையைக் கண்டு கலங்கிய அமரர்கள், அவன் ஆத்மலிங்கத்துடன் திரும்பிச் செல்வதையும், ஆத்மலிங்கம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டால் இலங்கை வேந்தனையோ இலிங்கத்தையோ அசைக்கவும் முடியாதென்பதையும் உணர்ந்து அவனைத் தடுக்க வழியறியாது விக்னேஸ்வரனைப் பிரார்த்தித்தனர்.

அன்பர்க்கன்பனுகிய நம் ஆனைமுகன் அந்தணச் சிறுவன் உருவத்தில் தசமுகனெதிரில் தென்பட்டனன். அதற்கு முன்பே தசமுகனுக்கு ஒரு உபத்திரவத்தை ஏற்படுத்திவிட, இலங்கேசன் வயிற்று வலி தாளாமல் சிறுவனிடம் ஆத்மலிங்கத்தைத் தந்துவிட்டு நீர் கழிக்கச் சென்றனன். அந்தணச் சிறுவன் அந்த இலிங்கத்தைத் தரையில் வைத்துவிட்டு ஏதுமறியாதவன்போல் சென்று கொண்டிருந்தான்.

அரக்கர்கோன் அதை அறிந்து ஓடோடி வந்து ஆத்மலிங்கத்தைப் பற்றிப் பிடுங்கிப் பார்த்தான். இலிங்கம் விட்டுக் கொடுத்ததேயன்றி, கைக்கு வரவில்லை. வலிமை வாய்ந்த அந்த இலிங்கம் அவன் கரத்திற்குப் பசுவின் காதைப் போலிருந்தது. கோபித்த தசமுகன் மிகவும்

சாதகநின் கஞ்சமலர்த் தாளே சரணங்காண்
ஆதங்கம் நீக்கியெனை அருளாய் அருளோனே.

ஆத்திரமாக "கோகர்ணம்! மஹாபல இலிங்கம்!" என நிந்தித்தான். அந்தணச் சிறுவனையும் தலையில் குட்டி அடித்தான். அவ்வளவுதான் தாமதம்.

வேழமுகன் விஸ்வரூபத்துடன் தோன்றினன். அவ்வுருவம் அண்டமளாவி அனைத்தையும் கடந்தது. அமரர்கள் அவனது தோற்றத்தைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அதோடு அச்சமும்கூட அடைந்து அலமந்தனர்.

இறைவன் மறக் கருணை கொண்டான். இராவணன் முற்பிறவியில் இரணியனுகவும், அதற்கு முன் பிறவியில் வைகுந்த நகரின் வாயிற் காப்போனுகவும் (துவார பாலகர்) இருந்தானென்பதும், ஸ்ரீ ராமரின் பாணத்தினுல் இராவணன் வீழவேண்டுமென்பது அவன் வரமென்பதும் அறிந்திருந்த கணுதிபன் அவனுக்கு ஓரளவு அறிவூட்டக் கருதினன். பிரம்மாண்டமான தனது துதிக் கையினுல் தசமுகனைப் பற்றிக் ககன மார்க்கத்தில் வீசி எறிந்தான். பாதாளத்தில் விழப்போகும் அவனை மீண்டும் பற்றித் தூக்கி எறிந்தனன். இவ்வாறு பன்முறை செய்ய, இலங்கேசன் தத்தளித்து "கணேசா! அபயம்! விநாயகா அபயம்! விக்னேஸ்வரா அபயம்!" என ஓலமிட்டான். கருணுகர கஜமுகன் சினம் தணிந்து விஸ்வரூபத்தை மாற்றி சாதாரண உருவத்துடன் இலங்கேசன் எதிரில் தோன்றி ஆத்மலிங்கம் அவ்விடமே இருக்குமென்றும், அவன் இட்ட பெயர் போலவே அவ்விடம் கோகர்ண க்ஷேத்ரமென்றும், இலிங்கத்தின் நாமம் மஹா பல இலிங்கமென்றும் வழங்கப் பெறுமென்றும், பிரதிதினமும் அவ்விடத்திற்கு வந்து இலிங்கத்தைப் பூஜித்துச் செல்லுமாறும் கூறிக் கட்டளையிட்டுச் சென்றனன்.

இவ்வாறுக சமயம் நேர்ந்தபோதெல்லாம் விநாயகன் விரும்பிய உருவத்தை அடைய வல்லவன் என்பதால் விக்னேஸ்வரனுக்குக் காமரூபதான் என்றநாமம்ஏற்பட்டதாம்.

நெஞ்சத்தில் நல்லருள்மெய் நேசமுளார் நேர்மைதனை
நஞ்சுகளர் தந்த நம்பா அருள்வாயோ.

பக்தப் பிரிய: தன்னை விரும்பிப் பக்தி செய்வோருக்குப் பிரீதி உடையவனும். பக்தர்கள்பால் அபார ப்ரேமை கொண்டவனும்.

மதோன்மத்த: மதம் × உன்மத்தம். மதம்-எல்லை கடந்த வலிமையும் ஆனந்தமும் கூடியிருப்பதனால் ஏற்படும். உன்மத்தன்-அழியாத, அசைக்க முடியாத உன்னத நிலையை திருப்தியை அடைந்திருப்பவனும் விக்னேஸ்வரன்.

இத்தகைய இன்னும் அளவிடற்கரிய புகழ்கொண்ட விக்னேஸ்வரனை, ப்ரம்ம ஸ்வரூபனை மறைகளும் உபநிஷத்துக்களும் திரிமூர்த்திகளின் அம்சனைக் கொண்டாடுவதில் பாராட்டிப் புகழ்வதில் வியப்பென்ன ?

சிவநேயச் செல்வர்கள் 9.

சீமந்தனி

(ரசபதி)

ஆரியா வர்த்த நாட்டு அரசன் சித்திர வர்மன். அரசர்க்கு ஆண் மக்கள் ஐவர். நலம் சிறந்த நாளொன்றில், மன்னர்க்குப் பெண் மகவு ஒன்றும் பிறந்தது. செல்வத் திருமகள் பெயர் சீமந்தனி. மன்னர் மகட்கு ஜாதகத்தை எழுதிய சோதிடர், அதை இனிது மகிழ்ந்து எடுத்து வந்தார். வந்தவரை அரசர் வரவேற்றார்.

மன்னர் பெரும! தங்கள் அருமை மகள், மணத்தில் உமையாள்; குணத்தில் திருமகள்; கற்பில் சீதை; அறிவில் கலைமகள்; வாய்க்கும் கணவனுடன் என்றும் மங்களகரமாக வாழ்வள்; என் ஆய்வில் கிடைத்த செய்தி இது என்று எடுத்து ஜாதகத்தைக் கொடுத்தார். காவலர்க்கு மனம்

தந்து காப்பாற்றும் தனிமருந்து, வீறுதரும்
மந்திரமாம் ஆறெழுத்தை மனனஞ்செய் என்மனனே.

களித்தது. கணிதர்க்கு வாரிப் பொருளை வழங்கினர். அவரும் சிறக்க வாழ்த்திச் சென்றார்.

மறுநாளே வேறு ஒரு சோதிடர் வந்தார். அரசே! பதினைன்காம் வயதில் தங்கள் மகள், தன் இன்ப மாங்கல் யத்தை இழப்பள் என்று அமங்கலமாக அறிவித்தார்.

அரச சபையே இதைக் கேட்டு அதிர்ந்தது. கொதித் தது பலர் மனம். அரசரிடம் சிறிது நேரம் பேச்சு மூச்சே பிறக்கவில்லை. பிறகு தெளிவு பிறந்தது. மன்னர் மாபெரும் சபையின் மனநிலை அறிந்தார்.

நாம் என்ன செய்ய முடியும்? ஜோதிடர் மேல் என்ன பிழை? ஜாதகமும் தப்பாது, தலைவிதியும் பொய்க்காது; இறைவன் திருவுளம்போல் ஆகட்டும் என்று, பெரும் சபை யில் அமைதியைப் பிறப்பித்தார். புண்பட்ட தம் உள் ளத்தை, எவருக்கும் அரசர் புலப்படுத்திலர்.

* * *

சிமந்தனி மங்கைப் பருவம் எய்தினள். தோழிய ருடன் சென்று நீராடல், பூப்பறித்தல் முதலிய ஆடல் பாடல்களில் போதைப் போக்கினள். தங்க விக்கிரகம் போல் இருந்த தலைவியைப் பந்தாடல், சுழன்றாடல், இசை பாடல் முதலிய காலமெல்லாம், கண்ட தோழியர் கண்ணீர் வடித்தனர். பகலில் ஒரு நாள் அதைப் பார்த்துவிட்டாள் சிமந்தனி.

என்ன நடந்தது? ஏன் வருந்துகிறீர்கள்?

ஒன்றும் இல்லையம்மா! ஏதோபோல் இருந்தது மனம்.

மறைக்காதீர்கள்! உங்களை எதுவோ ஒரு கவலை உறுத்துகிறது; உள்ளதைச் சொல்வதில் தப்பில்லை என்று, தாதியர் நிலை தாங்காமல் அன்பாக வினவினள் அரசகுமாரி. குயிலொலி நாண இருந்தது குரல்.

இரக்கம் மிக்க சிமந்தனியிடம், அதன்மேலும் மறைக்க அவர்களால் முடியவில்லை. தாங்கமுடியாத வேதனையுடன்

தந்திடுவா யின்பநிலை தந்திமுகன் தம்பீநீ
வந்திடுவாய் என்முன் வழங்கருளால் வாழ்வேனே.

தலைமைத் தோழி, இரு சோதிடர் சொன்ன குறிப்புக்களை விறிட்டுக் கூறி விக்கியழுதனள்.

திடுக்கிட்டது மனம். அப்படியா செய்தி? என்று அந்தரம் நோக்கினள் அரச மகள். வர வர ஏக்கம் வளர்ந்தது; தூக்கம் அதனல் தொலைந்தது. ஆடல் பாடல் அடங்கியது.

* * *

அடுத்த ஆரண்யத்தில் இருக்கிறது யாக்ஞவல்கியர் ஆஸ்ரமம். மாபெரும் அவர் பத்தினின் பெயர் மயித்ரா தேவி. முதிர்ந்த அத்தேவியிடம் முறையிட்டால், இப்பெண்ணரசிக்கு விமோசனம் பிறவாதா என்றாள் ஒரு தோழி.

ஆம். அதுதான் நலம் என்று உணர்ந்த சீமந்தனி, தோழியரைத் தொடர்ந்தாள். குறித்த இடத்தில் மயித்திரையைக் கண்டாள். கண்ணீர் பெருக அத்தேவியின் காலில் விழுந்தாள். சம்பவத்தைத் தாதியர் சங்கிரகமாகக் கூறினர்.

அப்படியா செய்தி! அஞ்சாதே சீமந்தனீ! மானம் அழிக்கும் சோதனையில் வேதனைகள் பல வரும். அதன் வெய்ய நிலை நீக்கி உய்யவழி செய்யும் மெய்யுணர்வு. இது தான் ஞான மயமான நல்லமைதி. கேள். சோமவார விரதத்தை மேற்கொள்! மாபெரும் மகிமை யுடையது தெய்வம். உமாமகேசர் அருள் உனக்கு உளதாகும். அதைத் தவிர வேறுவழி இல்லை. அந்த விரதம் அநுட்டிக்கும் முறை இது என்று, அநுட்டிக்கும் முறையையும் கூறி ஆறுதல் செய்து மயித்ரா தேவி அனுப்பினள்.

* * *

அன்றே விரதம் ஆரம்பம் ஆயது. சீமந்தனி வைகறையில் நீராடி அநுட்டித்தாள். மவுன நிலையில் உமாமகேசரை வழிபட்டாள். ஆலயத்தில் அற்புதமான ஆராதனை. மங்கலகரமான சதிபதிகளை வருவித்தாள். பார்வதி பர

பத்திப் பெருக்குற்றுன் பாதமதைப் போற்றும்
சத்தி யடியேற்குத் தருவாய்எம் தற்பரனே.

மேசராக அவர்களைப் பாவித்தாள். உயர்ந்த அமுதை உண்பித்தாள். தாம்பூல தட்சணை தந்து, பயனுன உப சாரம் பல செய்தாள்.உருகியது உள்ளம்;உணர்ச்சி வெள்ளம் கரைபுரண்டது. அது, பக்தி உருவாகிப் பரிணமித்தது. இவ்விரத சீலம் திங்கள்தோறும் திகழ்ந்து நடந்தது.

* * *

நலம்மிக்க நளதமயந்தியர் மைந்தன் இந்திர சேனன். அவன் நிடதநாட்டு அரசன். இந்திரசேனனுடைய குமாரன் சந்திராங்கதன்; அழகில் சிறந்தவன் அவன்; ஆற்றல் மிக்கவன். வயது முதிர்ந்த இந்திர சேனன், தன் மகனுக்கு சீமந்தனி தகுதியானவள் என்று அறிந்தான். இருதிற முயற்சிகள் இனிது நடந்தன.

மகளுக்கு மணம் செய்விப்பதா வேண்டாமா என்று, மயங்கியது சித்திரவர்மர் மனம். மறுக்காதே! மணம் நடக்கட்டும் என்று உள்ளுணர்வு சொல்கிறது. வாய்ப்பின் படி ஆகட்டும் என்று வேந்தர் ஒரு முடிவிற்கு வந்தார்.

ஆர்யா வர்த்த அரண்மனையில், திருமணம் சிறப்பாக நிறைவேறியது. பாவலர் பலர் வாழ்த்துப் படித்தனர். அருந்தவ முனிவர்கள் ஆசி கூறினர். அரசர்கள் பலர், பொருத்தமான தம்பதிகள் என்று பூரித்தனர். மூன்று மாதங்கள் வரை, மாமனர் மாளிகையில், ஒவ்வொரு நாளும் விருந்து மகோற்சவம். சந்திராங்கத சீமந்தனி தம்பதிகள் மென்மேலும் இன்ப வெள்ளத்தில் மிதந்தனர். எவர்க்கும் பொழுது போவதே தெரியவில்லை. இந்த இன்பக் கேளிக்கையிலும், சோமவாரம் விரதத்தை நோற்க மறக்கவில்லை சீமந்தனி. அந்த அற்புத ஆராதனையை, கண்டு சந்திராங்கதன் மனம் களித்தது.

* * *

ஒருநாள் மாலை நேரம். நண்பர்கள் வற்புறுத்தினர். அவர்களுடன், சந்திராங்கதன் நதிக்கரையை அடைந்தான்.

பார்வையால் என்றன் பரிபவமெல் லாம்போக்கி
பார்வதியாள் பாலா பரிந்தருளைச் செய்யாயோ.

ய்முனையில் வெள்ளம் புரள்கிறது. தோழர் பலர் தூண்டினர். பலர் தடுத்தும் கேளாமல், சந்திராங்கதன் படகில் ஏறினன். போகிறது தோணி. ஆற்றின் நடுவில் போய்க் கொண்டேயிருக்கிறது. எத்தனையோ பலர் படகில் ஏறியுளர். பிரம்மாண்டமான ஒரு அலை. ஆடியது படகு. அஞ்சிய அனைவரும் ,ஓ....ஓ....என்று ஒருபுறமாக ஒதுங்கினர்.

ஆ! ஆ! கவிழ்ந்தது படகு. ஐயோ இது என்ன வேதனை! வாய்திறந்த முதலைகள், விழுந்தவரை வீறி வந்து விழுங்குகின்றன. கரையில் இருப்பவர் கண்டனர். ஓட்டம் பெரு நடையாக ஓடினர். செய்தி காட்டுத் தீபோல் பரவியது. அரண்மனைச் சிப்பந்திகளுடன், அரசர் ஓடோடி வந்தார். பகீரதமுயற்சி. ஒரு பிரேதங்கூட அகப்படவில்லை.

அரசர் அலறுகிறார். புழுவாய் அரசி புலம்பித் துடிக்கிறாள்.

"நீர் மலிந்த பண்ணை நிடதத்தார் மன்னவனே!
தார் மலிந்த மார்பா! தமியேன் உயிர்த்துணையே!"
"என்னைப் பிரிந்தாய் நீ யென்றாலும் நான் தனியேன்
உன்னைப் பிரிந்து ஆவி உய்யேன் மற்று உய்யேனே"

என்று மார்பில் அடித்துக் கொண்டு சீமந்தனி மண்ணில் புரள்கிறாள். வையகத்தில் வாழேன்! நெருப்பில் வீழ்வேன் என்று துள்ளி எழுந்தாள். எவர் மனத்திலும் வேதனை எழுந்து வழிந்தது.

விதியை வெல்பவர் யார் அம்மா? ஆறியிரு! தேறியிரு என்று கதறுகிறார் காவலர்.

ஐயோ! நினைத்தாலும் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறதே! மணம் நிறைவேறி சில நாள் கூட ஆகவில்லையே! மஞ்சளும் மருக் கொழுந்தும் இதற்குள் உன்னை மறுத்துவிட்டதோ மகளே! என்ன செய்யலாம்! உடலுக்கு உரியான் உருவம் மறைந்தது; இனி ஆன்மநாதனை ஆராதனை செய்! நாம் கொடுத்து வைத்

வேல்முருகா நீயெனையெவ் வேளையிலும் சோதித்தல்
மால்மருகா மாண்போ ஓர்சொல் வழங்காயே.

தது அவ்வளவுதான் என்று குமுறித் தத்திக் குமுறினள் அன்னை.

பாங்கியரும் பலசொல்லித் தேற்றினர். உரிய நாளில் உத்தர கிரியை நடந்தது. கழுத்தில் இருந்த மாங்கல்யம் கழன்றது.

உலகமே ஒரு நாடக மேடை. மக்கள் நடிகர். கூடியிருந்து கும்மியடித்து, அதன் பின் மறைந்து போகும் மாயக் கூத்துதானே மனித வாழ்வு.

* * *

சோமவார நோன்பில் அழுந்தியது மனம். மாபெரும் துயரை, சீமந்தனிக்கு அதனல் சிறிது மறக்க முடிந்தது.

சந்திராங்கதன் இல்லாத காலம் பார்த்த சதிகாரப் பகைவர்கள், திடீரென்று படையெடுத்தனர். நிடத நாட்டைக் கைப்பற்றினர். இன்பப் புதல்வனை யிழந்து இடிந்திருந்த இந்திர சேனரை, அவர் தேவியுடன் தடுமாறும்படி சிறையில் தள்ளினர். எங்கும் ஒரே அல்லோல கல்லோலம். நொந்த புண்ணில் வேலை நுழைக்கும் இது தானு உலகம்? அட பாவமே!

* * *

மூன்று ஆண்டுகள் இடையில் உருண்டு ஓடின.

வழக்கப்படி ஒரு நாள் சீமந்தனி, தோழிகளுடன் யமுனையில் நீராட வந்தாள்.

என்ன வியப்பு! பரிமளம் எங்கும் படர, மணியணிகள் மின்ன, பட்டு உத்தரியம் காற்றில் படபடக்க, உதயசூரியன் போல், வெள்ளைக் குதிரைமேல் ஒரு வீரன் கரையோரமாக வருகின்ருன்.

யார் இவன்? உற்று நோக்கினள் சீமந்தனி. இந்த ஊர்க்குப் புதியவன்போல் இருக்கிறதே என்றுஎண்ணினள். ஓ! என்ன இது? பாய்ந்து வந்த அவன் குதிரை, நெருங்கிச்

தென்பழனி வேலா செவ்வேளே இவ்வேளை
துன்பது நீங்கென்றென் முன்வந்து தோன்ருயோ.

சீமந்தனி முன் நின்றது. இவ்வளவும் விநாடி நேரத்தில் விளைந்தன.

ஆஹா! யார் நீ? உன் பெயர் என்ன? கணவனை யிழந்த கைம்பெண்ணு நீ? அவன் பெயரை அறிவிக்க முடியுமா? என்று விறுவிறுத்துக் கேட்டான் வந்த வீரன்.

இந்தக் குரலே எங்கேயோ கேட்டதுபோல் இருக்கிறதே என்று எண்ணுகிறது சீமந்தனியின் இதயம். அவனை உவந்து நோக்கத் துடிக்கிறது உள்ளம். வாயில் ஒரு வார்த்தை கூட வரவில்லையே!

தோழிகள் முன் வந்தனர். ஐயா! இவள் பெயர் சீமந்தனி; இந்நாட்டு மன்னர் சித்திரவர்மர் மகள். கணவர் பெயர் சந்திராங்கதர். வீரமுடைய அவரை யமுனை விழுங்கியது. கைம்மை எய்தினள் எங்கள் அரசகுமாரி. இவள் மாமன் மாமியரையும் எதிரிகள் சிறைப்படுத்தினர். சோம வார விரதந்தான், இன்று ஆறுதலை எங்கட்கு அளிக்கிறது என்று, கண்ணீர் சிந்திக் கலங்கி உரைத்தனர்.

அடடா! அப்படியா செய்தி? என்று அலறினன் வந்தவன்.

ஐயா! நீர் யார்? காமனு? தேவ குமாரனு? என்னை முன்னே அறிவீரா? எங்கேயோ உம்மைக் கண்டதுபோல் இருக்கிறதே! ஒளிக்காமல் உண்மையை உரைப்பீரா? என்று துணிந்து சீமந்தனியின் வாயில் வந்தது வார்த்தை.

பெண்ணே! ஊன் இடமான மானிடன் அல்லன் நான். எண்ணிலாச் சித்தி பெற்ற விண்ணேரில் ஒருவன். கடிதில் உலகெங்கும் சுற்றிவரக் கற்றவன். இப்பொழுது தெரிகிறதா என்னை?

ஓஹோ! என்ன இது? எட்டிக் கையைப் பிடித்து இழுக்கிருனே! என்ன துணிவு ?

சீமந்தனிக்கோ, அந்த ஸ்பரிசம் இன்பகரமாக இருக்கிறது. உதறிக் கொள்ளவே மனம் வரவில்லை. அச்சம்

மங்கள காரணனே மாமயிலின் வாகனனே
சங்கடம் தீர்த்தருள சண்முகமுன் வாராயோ.

தாதிகட்கு அதிகரித்தது. ஒன்றும் தோன்றாது திகைத்தனர்.

உன் கணவன் வேறு ஒரு உலகில் இருக்கின்றான். இன்னும் இரண்டு நாளில் இங்குவருவான். அன்றோடு உன் துன்பம் அகலும். வருந்தும் உன்னிடம் இதை உரைக்கவே வந்தேன். இது உண்மை. சிவன்மேல் ஆணை. காலம் வரும்வரை, இது குறித்து எவரிடமும் வாய் திறவாதே! கனிவு மிக்க என் தாய்தந்தையர் கவலை தவிர்க்க, விரைந்து செல்லவேண்டும் நான் என்று சீமந்தனி கேட்க மெல்ல உரைத்து, வாயு வேகத்தில் குதிரையைத் துரத்தி கண்ணிற்கு எட்டாமல் மறைந்தான் அந்தக் காளை.

*　　　*　　　*

சீமந்தனிக்கு ஒரே வியப்பாக இருந்தது. என்ன இது? இதுதான் மனத்தின் மாயையா? கனவுதான் காண்கிறேனா? புகன்ற செய்தி பொய்யோ மெய்யோ புரியவில்லையே ? பதைக்கிறது மனம். சிலிர்க்கிறது மேனி. என் மனம் இவர் போன திசை நோக்கியே போகிறதே! ஒரு வேளை இவரேதான் அவரோ? பரமனை வழிபட்ட பயனோ இது? பல காலம் பதியொடு வாழ்வள் என்று, முதல் சோதிடர் சொன்ன பயன் முன் வந்து நிற்கிறதோ? எல்லாம் ஒரே குழப்பமாக இருக்கிறதே! எண்ணி எண்ணி இடிகிறது மனம். கசிந்து பெருகுகிறது கண்ணீர்.

என்ன அம்மா இது! ஓயாது கண்ணீரை ஒழுக விடுவது? வா போகலாம் என்று, அன்புடைய தாதிகள் சீமந்தனியை வலிந்து அழைத்துச் சென்றனர்.

*　　　*　　　*

நிடத நாட்டைக் கவர்ந்த பகைவன் கலியன், இறுமாந்து சிங்காதனத்தில் இருக்கின்றான். அவன் எதிரில் ஓலை செருகிய அம்பொன்று விர்ரென்று வந்து விழுந்தது. திடுக்கிட்ட கலியன், எடுத்து ஓலையைப் படித்தான்.

பந்தித்த மூலமலம் பாழாக உன்னடியே
வந்தித்தேன் என்றும் வாழ்வளிநீ வண்மையனே.

கலியா! என் கற்புடைத் தேவியின் விரதப்பயனுல், யமுனு நதியில் இறந்திலன். தோழர்களை முதலைகள் விழுங் கின; நீர்ச்சுழி என்னைப் பிலத்துவாரத்தில் செருக, அதன் மூலம், விமலமான பாதல நதியில் வீழ்ந்தேன். மூர்ச்சித்த என்னைத் தெளிவித்து, அங்குள்ள வித்தக நாகர் தட்சக னிடத்தில் விட்டனர்:

நான் நளதமயந்திகளின் பேரன் என்பதை, என் வாயா லேயே அறிந்து மகிழ்ந்தான் தட்சகன். உன் மனையாள் அனுட்டிக்கும் சோமவார விரதப் பயனுல், அதிபயங்கர முதலைகள் கண்கட்கு நீ அகப்படவில்லை; அதனுடன், பாதல லோகத்தைப் பார்க்கும் பாக்யம் பெற்றனை என்று, ஆசி கூறினன்; அமுதூட்டி, அங்நாட்டின் அணிபூட்டி, மூன்று நாள் உபசரித்து, தாய் தந்தையரையும் மனையாளை யும் காண விரும்பும் என் வேட்கை கண்டு, ஒரு இராட்ச சனை, ஒரு நாககுமாரனுடன் துணைகூட்டி, அழகிய இப் பூவுலகிற்கு அனுப்பினன்.

வந்த இடத்தில் நடந்திருக்கும் வரலாறுகளை அறிந் தேன். இவ்வுலகிற்கும் பாதலத்திற்கும் கால தத்துவத்தில் தான் எவ்வளவு வேற்றுமை? அங்கு நான் இருந்தது மூன்று நாள்; அது இந்நிலவுலகிற்கு மூன்று ஆண்டுகள் என்பதை யிங்கு வந்தபின் அறிந்தேன். இக்கடிதம் கண்ட தும், கவர்ந்த அரசை விட்டுவிடு; இன்றேல் எதிர்ப்புக்குச் சித்தமாக இரு! இப்படிக்குச் சந்திராங்கதன் என்று கை எழுத்துடன் இருந்தது கடிதம்.

அச்சம் அதிகரித்தது. பாதலம் சென்று மீண்டானை, அமுதம் பருகினனை, எதிர்க்க இவ்வுலகில் எவர் உளர் என்று அப்போதே எழுந்தான். முடிதுறந்து, செங்கோ லைப் போட்டுவிட்டு ஓடியே ஒழிந்தான் கலியன்.

செய்தி யறிந்த சந்திராங்கதன், உடனே விரைந் தான். தாய் தந்தையரை விடுவித்தான். மாண்டவன் மீண்

ஆதரிக்கும் வள்ளலெனும் ஆறுமுகத் தேவே
கோதகற்றும் நீயே குருவாய் வருவாயே.

டான் என்று மகிழ்ந்தனர் நிடத மக்கள். அதனுடன் விடை பெற்றுக் கொண்டு ராட்சசனும் நாககுமாரனும் பாதலம் மீண்டனர்.

மைந்தனைக் கண்டு மனம் களித்த இந்திரசேனன், ஆர்யா வர்த்தத்திற்குச் செய்தியை யனுப்பினன்.

சித்ரவர்மர் செய்தியறிந்து துள்ளினர். பல்லக்கில், சீமந்தனியைப் பாங்கியருடன் ஏற்றினர். அறிஞர் பலர் தொடர, நிடத நாட்டை யடைந்தார். இதைக் கேள்வியுற்று எந்நாட்டு மன்னரும் திரளாக வந்தவர் வந்தபடியே யிருந்தனர்.

நன் முகூர்த்தத்தில், சந்திராங்கதனுக்கும் சீமந்தனிக்கும், யாவரும் மகிழ நடந்தது மறுமணம். அரியணையேறி, அரசி சீமந்தனியுடன், சந்திராங்கதன் நலம் சிறந்த ஆட்சி நடத்தினன்.

* * *

இவ்வளவும் சோமவார விரதப் பயன் என்பதையறிந்த நாடுமுழுதும், அவ்விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கியது.

* * *

சுமேதா, சாமந்தன் என்ற அந்தணச் சிறுவர் இருவரும் தெளிந்து வித்தையில் தேர்ந்தனர். விதர்ப்ப நாட்டவரான அவ்விருவரும், மணம் செய்துகொள்ள விரும்பினர். தம் நாட்டு மன்னனிடம், செலவிற்குப் பொன் தருக என்று விண்ணப்பித்தனர்.

சீமந்தனி, சோமவார விரத காலத்தில் வரும் தம்பதிகட்கு வாரிப் பொன்னை வழங்குகின்றுளாம். இருவரும் தம்பதிகள் கோலத்தில் சென்றால், உங்கள் எண்ணம் அங்கு நிறைவேறும். சாமந்தா! இங்கே வா என்று ஈர்த்து, அவனுக்குப் பெண் வேடம் தரித்து, சபாஷ்! நீங்கள் சரியான தம்பதிகள்! என் மொழியை மீறினல் தண்டிப்பேன். போய் வருக என்று எச்சரித்தான்.

ஆறுமுகத் தேவேநீ யல்லா தடியேற்கருள
வேறுமுகம் உண்டோ விமலா விளம்பாயே.

விதியின் சதியை எண்ணிய இருவரும், ஆணைக்கு அஞ்சி அப்படியே சென்றனர்.

சோமவார விரதம் நடைபெறுகிறது. தம்பதிகள் ஆராதனை ஆரம்பம் ஆயிற்று. அக்கூட்டத்துள் சுமேதா சாமந்த தம்பதிகளைச் சீமந்தனி உற்று நோக்கினள்; இவர்கள் போலிகள் என்று, ஆரம்பத்திலேயே அறிந்தாள்.

யாரா யிருந்தால் என்ன? அவர்கள் எண்ணம் எதுவானுலும், நம் பாவனையில் பழுது ஆகாதென்று எண்ணியது மனம். அவ்விருவரையும், வரத உமா மகேஸ்வரராகவே பாவித்து வழிபட்டாள். குறித்த பொன்னையும் கொடுத்து அனுப்பினள்.

* * *

பாவனையின் அழுத்தத்தால், பெண் வேடம் கொண்டோன் பெண்ணே ஆயினன். மனமும் குணமுங்கூட பெண்மை யடைந்தது. சாமந்தனுகிய சாமவதி, செல்லும் வழியெல்லாம் பெண்மை இயல்பிற்கேற்ப நையாண்டிசெய்து நகைத்தாள். இருவரும் இல்லம் திரும்பினர். சாமந்தன் பிதா, நிகழ்ச்சியை யறிந்தார். விதர்ப்பனை அணுகினர். ஆத்திரம் அதிகரித்தது.

ஏ பாவி! நீ செய்த அக்கிரமத்தைத் தெய்வம் பொறுக்குமா என்று சீறினர்.

தன் குற்றம் உணர்ந்து வருந்திய விதர்ப்பன், அம்பிகையை நோக்கி அருந்தவம் செய்தான். ககன தேவி அவன்முன் காட்சியாயினள்.

அழுது கதறி அமலையைப் பணிந்த அரசன், தாயே! பிராமணேத்தர் சாபம் என்னைப் பாதிக்காதபடி, சாமவதியைப் பழையபடி சாமந்தனுக ஆக்கியருள்! என்று வீழ்ந்து முறையிட்டு வேண்டினன்.

விதர்ப்பா! அன்பர்கள் பாவனை ஆற்றலுடையது; அதை மாற்ற எவராலும் ஆகாது; இதை யறிந்துகொள்!

சாமவதியைச் சுமேதாவிற்கு மணம் செய்தவை. பிரம சிருட்டியினும் அதிக பெருமையது பக்தர்களின் பாவனை யால் உண்டான படைப்பு. அவர்களே உலகிற்கு அமை தியை யளிப்பவர்கள். அவர்கள் பெற்றோர்க்கு வேறு ஒரு ஆண்மகன் பிறப்பன் என்று அருளி, உருக்கரந்தாள் உமா தேவி. அவ் வாக்குப்படியே செயல் நிகழ்ந்தது. யாவரும் மட்டிலா மகிழ்ச்சியடைந்தனர். இதைக் கண்ட உலகம் கனிந்த இன்பம் கண்டது.

திருப்பல்லாண்டு 8.

மங்களா சாஸனம்

(அன்பன்)

அளவான வாழ்வு

உடம்பை அன்னமய கோசம் என்பர். ஆதலின், தேகம் வாழ அன்னம் தேவை. எனினும், அன்னத்தில் சத்து அதிகம் இல்லை. சத்துடைப் பொருளாம் நெய் பால் தயிரோ நித்தியம் வேண்டும். அதன் பின் குளிர்ச்சி நேர்ந்து குதூகலம் விளைய, சந்தன தாம்பூலச் சார்பு நலம் தரும். ஆம். எவரும் இவைகளை எதிர்பார்ப்பது இயற்கை. இம் மூன்றையும், போஷகம் தாரகம் போக்யம் என்பர்.

அரிய இம் மூன்றும் போதிய அளவு கிடைத்த பின், நிறைமனம் பெறுவது நியாயம். அவைகட்கு மேல், அகில மெலாம் கட்டி ஆள எண்ணுவது அநியாயம். அது, தெய்வ உடைமையைத் தனதாக்கிக் கொள்ள எண்ணும் விபரீத புத்தியின் விளைவு. இதனால் இரண்யாகாரம், இராவணாகாரந்தான் எழும்; இவைகளைப் பெற்றவர்க்கும்

வறுமைநோய் வன்பிணிகள் வாராமல் என்றும்
சிறியேனைக் காக்கச் செழித்தருளைச் செய்யாயோ.

இடையூறு; அவர்களால் ஆன்ம வாழ்விற்கும் அழிவு. சரித்திரங்கள் பல இதற்குச் சான்று.

ஆனையைப் பிடித்துப் பானையில் போடு; வைத்துக் கொண்டு விளையாடப் போகிறேன் என்று அழுகிறது குழந்தை.

பானையில் ஆனை புகுமா? புகுந்தால் பானை பிழைக்குமா? இளங்குழந்தை அதை எடுத்து விளையாட முடியுமா?

தம் சேயின் அறியாமையைக் கண்டு, நலம் சிறந்த பெற்றோர் நகைக்கின்றார். அதன் கவனத்தை மாற்ற, சிறு பாத்திரத்தை எடுக்கின்றார். வர்ணம் பூசிய ஒரு சிறு யானைப் பொம்மையை அதனுள் இடுகின்றார். இதோ பார்! பானையுள் யானை என்று பல்லைக் காட்டிப் பாடுகின்றார். ஏமாந்த குழந்தையும், பானையுள் ஆனை என்று குதூகலம் கொண்டு குதிக்கிறது. இத்தகைய அனுபவங்கள் எண்ணிறந்தன.

கண்டதை யெல்லாம், இப்படியே வீணாக ஆன்மா விரும்புகின்றது. அளிப்பான் அளித்தாலும், அவைகளை முன் வைத்து ஆள ஆன்மாக்களால் முடியவே முடியாது. ஆன்மாவின் அறியாமையை அறிந்த அருளாளன், வழி படும் உயிர்கட்கு உரிய அளவு உதவுகின்றான்.

வீண் வாழ்வு

ஆஹா! பயனுள உணவு பரிமாறினேம். பலர் இதன் மூலம் நம்மைப் பாராட்டுவர். என்று இப்படி எண்ணுகின்றார் விருந்து வைத்தவர்.

விருந்து உண்டவரோ, இதைவிட சிறந்த விருந்து வைத்து, நம் கௌரவத்தை நாம் காத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டம் இடுகின்றார். இந்த முனைப்பால், உணவின் சுவையோ பயன் தாராமல் ஒழிகிறது.

பரங்கிரிவாழ்புண்ணியவுன் பாதமலர்போற்றென்மேல்
இரங்கியிடர் தீர்ப்பாய் எம்மான்நின் அடைக்கலமே.

உயர் வாழ்வு

அருமை உணவைப் பரிமாறினேம் என்று அன்னையோ அகங்கரிக்கமாட்டாள்; மைந்தன் வளர்ச்சியிலேயே அவட்கு மனம். அதை உண்ணும் மைந்தன், உவந்ததன்றித் தாய்க்கு உடனே விருந்துவைக்கத் தான் எண்ணுவதில்லை. அது அன்பால் அளித்த அமுதம்; சுவையில் குறைவிலாத சோறு; உடலிலும் ஒட்டும் அந்த உணவு.

அதுபோல், இடையறுது தன்னை எண்ணுவார்க்கு, அருளொடு இறைவன் அளித்த முதல் உதவி அன்னம்; பிரீதியுடைய மகத்தான பிரஸாதம். என்ன அதிசயம்!

நெய் எடை உள்ளதோர் சோறு அது. ஒருபடிச் சோற்றுக்கு ஒருபடி நெய். அதாவது, சோறு பாதி நெய் பாதி; எந்த விருந்தும் இப்படி நேர்வதில்லை. பிறர்க்கோ ஜீரணமாகாது. எபபோதும் தன்னை எண்ணி, பேசி, வழி படும் அன்பர் வெம்மை தீர, தெய்வம் வைத்த விருந்து அல்லவா அது! பேஷ் பேஷ்! உண்டபின் தாம்பூலம். ஆஹா! உடலில் பூசி உவகை கொள்ள, உயர்ந்த சந்தனத் தைக்கூட அம்மான் தன் திருக்கரத்தால் அளிக்கின்றனே!

இதோ பாருங்கள்! தன் பக்தர்களின் அருமைச் செல்வ வளம் தோன்ற, கழுத்திற்குப் பொன்சரம்; குளு குளு என்று செவிகட்குக் குண்டலம். இவைகளையும் தானே முன் வந்து தரிக்கின்றன். என்ன குறை எனக்கு என்று, இவைகளால் இறுமாப்புக் கொள்கிறது இதயம்.

சேவகப் பேறு

உண்டு பூசி உடுத்து ஒய்யாரமாக உலவினல் போதுமா! உத்யோகம் புருஷ லட்சணம் என்கிருயா! அதுவும் சரி, உன்போன்ற பிறரிடம் உத்யோகம் விரும்பாதே; அதனி லும்தான் எவ்வளவு போட்டி பொல்லாப்பு! கூத்தாடி கிழக்கு நோக்க, கூலிக்காரன் மேற்கை நோக்குவான். சீச்சி! இப்படி அறிவிலாது அழியும் அடிமை வாழ்வை

ஆநந்த ஆச்சர்ய ஆட்டமதைக் கண்டுய்ய
ஆநந்த சத்தியளி ஆறுமுக வேலோனே.

விட, மாண்டு மடிந்து மண்ணுவது மேல். வேண்டவே வேண்டா அந்தச் சூழ்நிலை.

எம்முடன் பிரியாமல் இரு! கருத்தால் எம்மைக் கருதி யிரு! நோக்கால் எம்மை நோக்கையிரு! பயன் கருதி வழி பட்ட பழமை, நலமிலாத ஜீவனுர்த்த நடை. அதை அடியொடு மறந்துவிடு!

பரம பக்தனைத் திருந்திய இன்றைய நிலைதான் உஜ்ஜீவனுர்த்த உயர்ந்த நடை. உன் போன்றவர்க்குத் தான் என்னிடத்தில் இடம் என்று, நியதமும் அத்தணிச் சேவகம் அருளினன் எம் ஆண்டவன்.

ஆஸ்தான சேவகம் என்னும் பெயரால், என்றும் பிரியாமல் எம்பெருமான் இடமிருந்து உயர்ந்த பணி செய்யும் பயனை உத்யோகம் அது. அதனுடன் முன்னைய நிலையில் உண்டியே உடையே உகந்து ஓடும் இம் மண்டலத் தாரொடும் கூடி இழிந்த என்னிடத்தில் இருந்த கரு நிறத் தமோகுணத்தைக் களைத்தான்; செந்நிற ரஜோ குணத்தைச் சேதித்தான். வெண்ணிற உயர்ந்த சத்வ குணத்தை உதவினன். அதன்பின், அதமாத்மா, துராத்மா எனும் பெயரெல்லாம் அழிந்தது; சுத்தாத்மா எனும் நித்தியப் பெயரே நிலைத்தது. இப்படி என்னை வெள் உயிர் ஆக்கும் வல்லாளன் அந்த வரதன்; இவைகளை எண்ணும் போதே உள்ளம் பாகாக உருகுகிறதே!

அந்த அருளாளன் பெருமையை அதிகம் அறிந்த ஆதிசேஷன், தன் சுத்தமான உடலைப் பஞ்சு மெத்தை போல் சுருட்டுகிறன். மகிழ்ந்து படங்களை மலர்த்துகிறன்.

மேற்கில் திருமுடி; கிழக்கில் திருவடி; வடக்கில் திருமுதுகு; தெற்கில் திருமுகம். அந்த ஆதிசேடன் மேல் அப்படிப் படுத்த அன்றும் இன்றும் அறிதுயில் கொண்டுளன் அத்தன். அதனுல் அப்பரமனுக்கு, பைந்நாகத்தான் என்று பண்டுமுதல் ஒரு பெயர் உண்டு.

கொடிய பாம்பின் குலத்திற்கேபகையானவன்கருடன். அந்தக் கருடாழ்வாரை, எனக்குக் கொடியாக இரு என்று கொண்டான்.இப்படிப்பகை தவிர்த்தாலும் பரந்தாமனுக்கு (நாகப்பகைக்) கொடியான் என்ற பெயரும் இருக்கிறது.

பயனை இப்படியே படியேற்றும் பகவானுக்குப் பல்லாண்டு பாடுவது என் பாக்கியம்.

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச்சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்
மெய்யிடை நல்லதோர் சாந்தமும் தந்து, என்னை வெள் உயிர்
ஆக்கவல்ல
பையுடைய நாகப் பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுதுமே

(பொ-ரை.) நெய் அளவிற்கு உரிய நலம் சிறந்த சோறும், என்றும் உடனிருக்கும் பணியும், கைக்குத் தாம் பூலமும், கழுத்தணியும், செவியணியும், உடலில் மணம் கமழச் சந்தனமும் தாமே தம் திருக்கரத்தால் அருளி, (முறை மறக்கும் முக்குண சம்ஸாரியான) என்னைச் சாத்விகம் செய்ய வல்ல படமுடைப் பாம்பணையானும், பாம்பினப் பகையான கருடக் கொடியை உடையவனுமான பரமனுக்குப் பல்லாண்டு பாடுவன், (எ—று).

விலங்காகி வாழும் லௌகிக வாழ்வில், அமைதி பிறக்க தெய்வ வழிபாடு தேவை. அது வேண்டும்; எனக்கு இது வேண்டும் என்று பிரார்த்திக்கும் பாழும் காமிய பக்தியாலும் பாதகம் இல்லை. வழிபடுவார் விரும்புகிறபடி யெல்லாம் அளவுக்கு மீறியளித்து அவர்களை இடர்ப்பாட்டில் அழுத்தாமல் அளவாக உதவி, அதன் மூலம் நிட்காமியராக்கி, அமைதி தந்து பணிகொள்ளும் பரந்தாமன் அருளை எண்ணி, இதயம் கனிந்து பல்லாண்டு பாடுவதே பயனை வாழ்வு என்பதைப் பெரியாழ்வார் அருளொடு நமக்கு அறிவிக்கின்றார்.

'நெய்யிடையிட்ட' என்றும் பாடத்தில் பேதம் உண்டு. நெய் மிகுதியாக, அதன் நடுவில் சிற்றளவே சோறு என்

வன்னிகர்ப்பா வள்ளி மனோகரனே வேதஞ்சொல்
பன்னிரண்டு கண்ணு பரிந்தருளைச் செய்யாயோ

பது அதன் பொருள். 'மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக் கூடியிருந்து குளிரும் இக்கடை கோடி பெறும்.

சண்டேசுர நாயனர்

(380-ஆம் பக்கத் தொடர்ச்சி)

(கி. வா. ஜ.)

மாட்டுக்கு ஏதோ உற்சாகமோ, அல்லது கோபமோ தெரியவில்லை. அது தன் தலையைத் தாழ்த்திக் கொண்டு கொம்பினல் ஆய்க்குலச் சிறுவனை முட்ட வந்தது. அவன் சற்றே விலகிக் கொண்டு பின்பு அதைத் தட்டிக் கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் சண்டேசர் பெருமை உலகுக்குத் தெரிந்திருக்காதே! தன்னை முட்டவந்த பசுமாட்டை வெளுவெளுவென்று வெளுத்துவிட்டான் அந்த ஆய்ச் சிறுவன். பசுவின் கண்ணில் நீர் வந்ததோ என்னவோ. அங்கே நின்ற பிரமசாரி ஒருவனுடைய கண்ணில் கடகடவென்று நீர் அருவி புறப்பட்டது.

சோழவள நாட்டில் மண்ணியாற்றங் கரையில் உள்ள சேய்ஞலூரில் நடந்த காட்சி அது. வேத வேள்வியைப் போற்றி வாழும் அந்தணர் மலிந்த ஊர் அது. எப்போதும் வேத முழக்கமும் வேள்விப் புகையும் நிரம்பிய பெரும்பதி. முருகன் இறைவனை வழிபட்ட நல்ல ஊர்; ஆதலால் அதற்குச் சேய்ஞலூர் என்ற திருநாமம் உண்டாயிற்று. அதுவே இறைவனுக்கு மற்றொரு சேயை வழங்கும் நல்ல ஊராகவும் ஆகப்போகிறது.

சேய்ஞலூர் அந்தணர்களில் எச்சதத்தன் (யக்ஞதத்தன்) என்பவன் ஒருவன். அவனுடைய குமாரன் விசாரசர்மன். அந்தப் பிள்ளையாண்டானே ஆயன்கைக் கோலால் அடிபட்ட ஆவைக் கண்டு கண்ணீர் சொரிந்தவன்.

மறையவர் வீட்டு ஆவினத்தை மேய்த்துவரும் கடமையைச் செய்பவன் அந்த ஆய்க்குலச் சிறுவன். அவன் மாட்டை அடித்தவுடன் இந்த அந்தணச் சிறுவனுக்கு உள்ளம் கலங்கியதற்குக் காரணம், அவன் இளமையில் இறைவன் அருளொளி வீசும் அறிவு நிறைந்தவனாக இருந்ததுதான். உபநயனம் செய்வதற்கு முன்பே அவனுக்கு வேத மந்திரங்கள் தெரிந்துவிட்டன. அவனுக்கு ஏழு வயதில் முப்புரிநூல் அணிந்தனர். அதன்பின் வேத அறிவில்

நெஞ்சே குமரபதம் நித்தநித்தம் போற்றி
அஞ்சா தபயம் அடைதி குறையிலையே.

தலைசிறந்து நின்றான். அந்த அறிவோடு இறைவனை எண்ணி வாழும் பேரன்பும் அவனிடம் உண்டாயிற்று.

ஆய்க்குலச் சிறுவன் பசுவை மேலும் அடிக்காமல் சென்று அவனைத் தடுத்தான் விசார சர்மன். அவனுடைய மனக்கண்முன் ஆவினத்தின் பெருமைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின. எல்லாத் தேவர்களையும் எல்லாத் தீர்த்தங்களையும் தன் உடம்பில் கொண்டு விளங்கும் புண்ணியத் திருவுருவமல்லவா பசு? நம்மை யாளும் சிவபெருமானுடைய அபிஷேகத்துக்குப் பஞ்சகவ்வியங் களை வழங்கும் பெருமை உடையதாயிற்றே. சிவபெருமானுக்கு உகந்த திருநீற்றுக்குரிய மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் அன்றோ? எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் எழுந்தருளும் விடைத்தேவருடைய குலம் அல்லவா இந்த ஆன் குலம்?" என்ற நினைவினால் அவன் உருகினான்.

"இனிமேல் இந்தப் பசுக்களை நீ மேய்க்க வேண்டாம் நானே மேய்க்கிறேன்" என்று ஆயனைப் பார்த்து மறைச் சிறுவன் கூறி, அன்றுமுதல் அவற்றைப் பாதுகாக்கும் செயலை மேற்கொண்டான். மறையவர்களும் அதற்கு உடன்பட்டார்கள்.

பசுக்களின் மேன்மையை அறிந்தவராதலின் அவற்றை வளப்பமான புல் உள்ள இடங்களுக்கு ஓட்டிச் சென்று மேய விட்டும், தானே புல்லைப்பறித்து அளித்தும் நல்ல நீர் உள்ள இடத்தில் நீருந்தச் செய்தும் கண்ணும் கருத்துமாகப் போற்றி வந்தான். அதனால் பசுமாடுகள் முன்பை விட அழகும் வளமும் பெற்று நிரம்ப பாலைப் பொழிந்தன. வீட்டிலே கன்றை விட்டுவிட்டு வந்த பசுக்கள், மறைக்கன்றாகிய விசாரசர்மனிடத்தில் மிக்க அன்பு உடையன வாகி அவனை நக்கிக்கொடுத்தும், அவன்மேல் உராய்ந்தும், கறக் காமலே மடியிலிருந்து பாலைப் பொழிந்தும் தம் அன்பைப் புலப் படுத்தின.

ஆவினங்கள் பால் பொழிவதைக் கண்ட சிறுவனுக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற் குரியது அல்லவா இப்பால் என்ற எண்ணத்தால் ஒரு காரியம் செய்யத் தொடங்கினான். மண்ணி யாற்றங் கரையிலே மணலாலே ஒரு கோயில் கட்டினான். அதன் நடுவே மணலால் சிவலிங்கம் அமைத் தான். புதிய பாண்டங்களைக் கொண்டுவந்து பசுக்களின் மடியி லிருந்து பாலைக் கறந்து வைத்துக் கொண்டு அவற்றை மந்திரங் கூறி அபிஷேகம் செய்வான். அங்கே கிடைக்கும் மலர்களையும் இலைகளையும் பறித்து வந்து அருச்சனை செய்வான். இந்த அன்புப் பூசை நாள் தோறும் நடைபெற்று வந்தது. பூசை செய்யப் புகுந்து விட்டால் இச்சிறுவன் எவற்றையும் மறந்து அப்பூசையில் ஈடுபட் டிருப்பான். இந்தப்பூசைக்குப் பால்வழங்குவதனால் வீட்டில் கறக்கும் பாலின் அளவு குறையவில்லை, பின்னும் மிகுதியாயிற்று.

ஒருநாள் அயலூரான் ஒருவன் இந்த இளம் பெரியான் செய்யும் பூசையைக் கண்டான். அந்தப் பிரமசாரியின் பக்தியைத் தெரிந்துகொள்ளும் பாக்கியம் அவனுக்கு இல்லை. பையன் விளையாட்டாகப் பாலையெல்லாம் மணலில் ஊற்றி வீணாக்குகிறான் என்று எண்ணினான். அதோடு அவன் நிற்கவில்லை. உடனே சேய்ஞலூர் சென்று, "இந்தப் பைத்தியக்காரப் பிள்ளையாண்டானை நம்பி மாடுகளை மேய்க்க அனுப்பியிருக்கிறீர்களே! இவன் பாலைக் கறந்து கறந்து மணலில் கொட்டுகிறானே!" என்று ஊர்ப் பெரியவர்களிடம் சொல்லிவிட்டான். அவர்கள் எச்சதத்தனை அழைத்து, "உன் பிள்ளை இப்படிச் செய்கிறானமே?" என்று விசாரித்தார்கள். "எனக்கு இச்செய்தி தெரியாது. இதுவரையில் நடந்ததைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இனி நடவாமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவன் உறுதிமொழி கொடுத்தான். இதைத் தன் பிள்ளையிடம் சொல்லாமல் அன்று இரவு இருந்த எச்சதத்தன், மறுநாள் தன் மகனுடைய செயலைக் கவனிக்கப் புறப்பட்டான்.

வழக்கம் போல் புண்ணிய உருவாகிய அச் சிறுவன், பல மண்பாண்டங்களில் பாலைக் கறந்து கொண்டு அருகே வைத்துக் கொண்டு பூசையைத் தொடங்கினான். அவனுடைய தந்தையோ, என்ன நடக்கிறது என்பதைக் காண அருகே ஒரு குரா மரத்தின் மேல் ஏறி மறைந்து கொண்டிருந்தான். ஆவாகனம் முதலிய வற்றை முறைப்படியே செய்த இளம் பக்தன் பசுவின்பாலை எடுத்து மஞ்சனம் ஆட்டத் தொடங்கினான். அப்போது சினம் மிக மூண்ட எச்சதத்தன் கீழே இறங்கி வந்து தன் கையில் இருந்த கோலால் தன் புதலவன் முதுகில் அடித்தான். பூசையிலே ஈடுபட்டுத் தேக உணர்வையும் மறந்திருந்த விசாரசர்மனுக்கு அந்த அடி உறைக்கவில்லை. பூசையை நிறுத்தவில்லை.

பின்னும் அவனுக்குக் கோபம் அதிகமாயிற்று, அங்கே பாலை நிரப்பி வைத்திருந்த பாண்டங்களைக் காலால் தட்டினான். அப்போதுதான் விசாரசருமனுக்கு உண்மை தெரிந்தது. தன் தந்தை செய்யும் அடாத காரியம் அவன் கண்ணில் பட்டது. அருகில் இருந்த கோலை எடுத்தான். திருவருட் பலத்தால் அதுவே கோடரியாக மாறியது. இறைவனுக்குரிய திருமஞ்சனப் பால் வைத்த குடங்களைச் சிதைத்த கால்களின் மேல் வீசினான். கால் இரண்டும் துண்டுபட்டு மறையவன் கீழே விழுந்தான். அதே சமயத்தில் வான் வெளியில் இறைவன் விடையூர்தியின் மேல் உமாதேவியுடன் தோன்றினான்.

பக்தி முதிர்ந்த பாலகன் அப் பெருமானுடைய திருத்தாளில் விழுந்து பணிய, இறைவன் அச் சிறுவனை எடுத்தணைத்து, "பெற்

றெடுத்த தந்தையை நீ மழுவால் எறிந்தாய். அந்தத் தகப்பனை நீ போக்கினாய். இனி உனக்கு நாமே தந்தை" என்று சொல்லி அவனுடைய உச்சி மோந்து திருவருள் பாலித்தான். சிவபிரானுடைய அணைப்பிலே தெய்வ ஒளிமயமாகத் திகழ்ந்தான் சிறுவன். இறைவன் தன்னுடைய திருமுடியிலிருந்த கொன்றை மாலையை எடுத்து விசாரசருமனுக்கு அணிந்து, "அப்பா, நம்மைப் பூசை செய்த நிர்மாலியங்களும், நிவேதனம் செய்த பிரசாதமும் உனக்கு உரிமையாகும்படி செய்தோம். உனக்குச் சண்டீசபதம் வழங்கினோம். இனி நீ சிவனடியார்களாகிய மாகேசுவரர்களுக்கெல்லாம் தலைவனாகப் பிரதம மாகேசுவரனாக விளங்குவாய்" என்று அருளினார். அது முதல் விசாரசர்மர் சண்டேசர் ஆனார். இறைவன் பூசையின் நிர்மாலியங்களை அவருக்கு அணிந்து வழிபட்டார்கள் பக்தர்கள். திருக்கோயில்களில் நிவந்தம் அமைப்பாரும் பிறரும் முதல் மகேசுவரராக வழிபட்டுத் தொண்டு புரிந்தனர்.

தான் செய்த அபசாரத்துக்குரிய தண்டனையைப் பேரடியாரால் பெற்ற எச்ச தத்தன், அத்தண்டனையால் பாவம் நீங்கிச் சிவலோக பதவியை அடைந்தான்.

விசாரசர்மர், தாமே பாலைச் சோரவிட்ட ஆவின் அன்பையும், அப்படிக் கீழே சொரியும் பாலையும் கண்டு, மக்களுக்கு வேண்டிய அளவுக்கு மேற்பட்டுப் பெருகும் அப் பாலை, பின்னும் சிறந்த தொண்டுக்குப் பயன்படுத்த எண்ணினார். அதனால் சிவ பூசைக்குப் பயன்படுத்தினார். அவருக்குச் சிவபூசை விளையாட்டின்பம் கிடைத்தது. ஒருமை மனத்தோடு இறைவன் பூசையில் ஈடுபட்ட அதுவே அவருக்குத் தவமாயிற்று. வேண்டிய வேண்டியாங்கு எய்தும் தவத்தால் அவர் உயர்ந்த பதவியைப் பெற்றார்.

LIFE - A TRUST

Certain propositions are basic for all religions. The first proposition may be stated to be that God is the creator of the world and all lives are His creatures. The next proposition may be stated to be that every human body is a tabernacle of God, a moving temple. The Upanishads declare that God created the world, and it was not until He entered into it that the world began to move. The motion of life is treated as

but the evidence of the Lord' subsistence within. The Lord is both transcendental and immanent. The immanence of God in every life makes every life a temple - a dewastanam. The human ego becomes necessarily the trustee of the temple, viz. its own body. Thus it can be realised that the world consists of countless temples ;but, comparatively few temples are kept and administered in an atmosphere of divinity.

Whatever names and forms are adopted to indicate the one Lord of the universe, the universal brotherhood becomes the fraternity of trustees who, (each in his own sphere), are entrusted with the tabernacles of God in the universe. Brahma, of the Trinity, represents the phase of the Lord which is creative, and He creates only temples. Tirumular's description of men as the moving temples of the Lord in creation is a distinct advance in the philosophy of bhakti. Men - the trustees of these moving temples-have a binding duty not only in keeping their own bodies clean both outside and inside, but also in the helping of other men to keep their own temples in an essential spiritual atmosphere. Thus every life is a trust. Every man who does not live in due recognition of the Lord's residence within and without is committing a breach of trust. Disciplined reverence to the Lord within himself, and the loving respect and service to the Lord without, residing in the moving temples of the world of life, are essentially basic obligations of every life. These obligations get attached at the moment of birth and continue till the body disappears. What are the sanctions for good conduct and behaviour in life. The ultimate sanctions for urbane behaviour, good manners,

for truthful life and moral conduct, for universal service and love, are to be found in the depths of the realised philosopby of all religions. All that is involved in a good life well lived, is after all, what is due to the Lord who is within and without. The success of a trusteeship is measured only by duties well performed. Trustees of human beings are permitted to make lawful appropriations of a class but not misappropriations, which mean non-permissible appropriations. The way to avoid all possible breaches of trust is to fill your thoughts in an absorbing sense of God-love; for God-love is the only means of effectuating the ideal of universal love. Love and serve life-the all life and every life wherever it be and fulfil the trusteeship of birth. Serve the universal in every life when it falls to your lot. The universal is conditioned in a multitude of beings and lives, so that it may be easy of approach and appropriation, easy of being loved and served and thus enjoyed. But whenever you love and serve, ignore the conditions and love and serve the *unconditioned* within the *conditioned.* It is in the mercy of the Lord which is His sacifice, or yegna that he exhibits himself in the conditioned order of the universe. Great men have always penetrated through the conditions by love or bhakti and have realised the one and the only one existence behind, and thus have added the eternal joy to their experience of life. These are the truest trustees of mankind. May mankind arise to the truest realisation of its trust and fulfil the purpose of creation.

—*Thiruppugal Mani*

மூல நிலத்திற் குண்டலிமேல் முதன்மை அருளைப் பொழிகின்றாய்!
சில நிறைந்த மேலோர்தம் சிந்தை யிருந்து சிரிக்கின்றாய்!
வாலை குமரா! சித்தியொடு வாழும் புத்தி மணவாளா!
பால குமார கணபதி! நின் பாதம் காட்ட வாராயோ!!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Coffee

Ours for Quality

RAW. ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd :—1924 Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18